672



பட்டபயன் எல்லாம் பாழாகிப் போகாது
கொட்டுமழை இன்றேனும் கொஞ்சமழை பெய்ததடா !

# தமிழ்க்கலை

## திங்கள் வெளியீடு

உள் நாடு :

| | |
|---|---|
| தனிப்படி | 0—4—0 |
| ஆண்டு வரி பொங்கல் மலருடன் | 3-8-0 |

வெளி நாடு :

| | |
|---|---|
| தனிப்படி | 0—5—0 |
| ஆண்டு வரி பொங்கல் மலருடன் | 5-0-0 |

தனிப்படிகள் சுதேசமித்திரன், ஹிகின்பாதம் ரெயில்வே புத்தகசாலைகளிலும், முக்கிய ஊர்களில் உரிமை பெற்ற விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்

## விளம்பரம்

ஒரு முறைக்கு

| | |
|---|---|
| வெளிப் பக்கம் (அட்டை) | ரூ. 100 |
| உள் பக்கம் ( „ ) | 75 |
| சாதாரண பக்கம் | 50 |
| „ ½ பக்கம் | 30 |

நீண்டகால விளம்பரத்துக்கு நேரில் எழுதவும்.

பொறுப்பாளர் :

'தமிழ்க் கலை'

34, வைத்தியநாத முதலிதெரு,

சென்னை 10.



# தமிழ்க்கலை

ஆசிரியர்

அ. மு. பரமசிவானந்தம்


விரியும் அறிவு நிலை நாட்டுவிர் - அங்கு
வீழும் சிறுமைகளை ஓட்டுவிர்—பாரதி.


திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯

1 — 12 — '48

கலை - 6 ❊ நூல் - 6


## பொருளடக்கம்


| | |
|---|---|
| வடக்கும் தெற்கும் | 4 |
| மீண்டும் குதிரைப் பந்தயம் | 6 |
| சென்னையின் புதிய மேயர் | 7 |
| கட்டுரைப் போட்டி | 7 |
| அந்தியின் அழகு ! | 8 |
| கொடுங் கோன்மை | 9 |
| அறிவும் அறமும் | 10 |
| பிரிட்டிஷ் விவசாயப் பண்ணைகளின் நிர்வாகம் | 17 |
| முதியோர் இருவர் | 21 |
| அந்தத் தொடக்க நாளில் | 28 |
| விதியின் விளையாட்டு | 36 |


கலையில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியாகார்.





## பொருந்திய உடையே பெருமை தருவது

**எம்.ஸி.எச். ஜவுளிகள்**

குறைந்த விலையில் சிறந்த ஆடைகள்.

நாகரிகப் பொருத்தமுடன் சௌகரியமான அணியாகவும் விளங்குவதே ஒரு கனவானின் ஆடை இலக்கணமாம். எம். ஸி. எச். ஆடைகளை உங்கள் தேர்ந்தெடுப்புக்கு உகந்ததாக்குவதும் இக் குணங்கள் தாம் — சரியான இழை, நெசவுடன் கூடிய எம். ஸி. எச். கோட், ஷர்ட், ஸூட் துணி வகைகள், டிரில், லுங்கிகள், வேஷ்டிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் பொருந்துமாறு எண்ணிறந்த வகைகளில் கிடைக்கின்றன.

எங்கள் கைத்தறி ஜவுளிகள் சென்னையிலும் இதர முக்கிய நகரங்களிலும் உள்ள எம் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

**மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

"ஹாலோவேஸ் கார்டன்ஸ்", 34, பாந்தியன் ரோடு, எழும்பூர், மதராஸ்

# தமிழ்க்கலை பொங்கல் மலர்

## 10-1-49ல் எங்கும் கிடைக்கும்

விலை ரூ. ஒன்று - தபால்மூலம் ஒன்றேகால்
வெளிநாடுகளுக்கு ரூ. ஒன்றரை

தேவைகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்

## கவிதைகளும் கதைகளும் கட்டுரைகளும் நிரம்பிய மலர்

## இயற்கைக் காட்சிப் படங்கள் பலகொண்ட மலர்

**எழுதும் அறிஞர்களில் சிலர்**

| | | | |
|---|---|---|---|
| திரு. | ரா. பி. சேதுப் பிள்ளை | அவர்கள், | B.A., B.L. |
| டாக்டர் | மு. வரதராசனுர் | ,, | Ph. D. |
| திரு. | மொ. அ. துரை அரங்கனுர் | ,, | M. O. L. |
| ,, | அ. ச. ஞானசம்பந்தம் | ,, | M. A. |
| ,, | நாரண துரைக்கண்ணனுர் | ,, | |
| ,, | பொ. பரமகுரு | ,, | M. A., B. L. |
| ,, | இளங்கோவன் | ,, | |
| ,, | கீ. இராமலிங்கனுர் | ,, | M. A. |
| ,, | வாணிதாசன் | ,, | |
| ,, | அன்பழகன் | ,, | M. A. |
| ,, | சீனிவாசன் | ,, | B.O.L.(Hons) |
| திரு. | தென் ஆப்பிரிக்கா. ச. மு. பிள்ளை | | |
| ,, | P. சேஷாசலம் | ,, | B. A. |
| திருமதி. | ரா. சரோஜினி | ,, | M. A. |
| திரு. | ஆ. மா. சகதீசன் | ,, | |

**விளம்பரம் :** அட்டை வெளி. ரூ. 250/- உள் ரூ. 150/- சாதாரண முழுப்பக்கம். ரூ. 100/- அரைப் பக்கம் ரூ. 60/- கால் பக்கம் ரூ. 30/-

விவரங்களுக்கு எழுதுக :

**பொறுப்பாளர்**

தமிழ்க்கலை, சென்னை - 10.

# வடக்கும் தெற்கும்

சித்தூர்ப் பள்ளிகளில் தமிழ்மாணவர்கள் படும் அவதி பற்றிச் சென்ற இதழிலே குறிப்பிட்டோம். அங்குப் பெரும்பாலாராகத் தமிழ்மக்கள் உள்ளனர். அவர்கள் தாய்மொழியாம் தமிழைப் பயில விழைகின்றனர். ஆனால், அங்கு அந்த வசதி செய்துதரப்படவில்லை. சென்னையிலும், செங்கற்பட்டிலும் உள்ள சிறுபான்மைத் தெலுங்கர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் அரசாங்கம் செய்து தந்துள்ளது. அவர்தம் குழந்தைகள் - மாணவர்கள் - முதன் மொழியாகத் தெலுங்கைப் பயில அவர்கள் தாராள ஏற்பாடுகள் செய்துகொடுத்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பம் எதுவோ அது நிறைவேற்றப்படுகிறது. ஆனால், அங்கே, சித்தூரிலே பெருவாரியாக உள்ள தமிழ் மாணவர் நிலை உண்மையில் இரங்கத்தக்கதாக உள்ளது.

'பிரதேச' மொழியாகச் சென்னையிலும் செங்கற்பட்டிலும் தமிழ் இருக்கவேண்டும் என்பதைச் சாதாரண மக்களும் அறிவர். இருந்தும் இங்கு வாழும் தெலுங்கர், பிரதேச மொழியை விட்டு, தாய்மொழியைக் கற்க வசதி செய்து கொடுத்திருக்கும் அரசியலார் சித்தூர் எல்லையை அடியோடு மறந்ததோடு மட்டுமன்றி, மாற்றுவிதிக்கும் இடமளித்துள்ளதைக் காணத் தமிழர் வருந்தாதிருக்க முடியவில்லை. சென்னை மாநிலக் கல்வித் தலைவரே (Director of Public Instruction) அவ் வழியில் ஆணை அனுப்பினதாகவும் அறிகிறோம். சித்தூரின் பிரதேசமொழி தெலுங்கு; எனவே அங்குள்ள எல்லா மாணவரும் - தமிழரும் பிறரும் கூட, மூன்றும் வகுப்பிலே இருந்து தெலுங்கு பயின்றே ஆகவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்னே தமிழ் மாணவர்தம் குறைபாடு! சென்னை செங்கற்பட்டில் உள்ள தெலுங்கு மாணவர் மூன்றுவதிலிருந்து தமிழ் பயிலவேண்டும் என்ற முறை உண்டா? இல்லை. மூன்றுவதில் தெலுங்கு, ஆறுவதில் இந்தி, பிறகு ஆங்கிலம்! எனவே சித்தூரின் தமிழ்மக்கள் இனித் தம்மைத் தமிழர் என்று கூறிக்கொள்ளாவகையில் கொடுமைகள் நடத்தப்படுகின்றன. அங்குள்ள நாட்டாண்மைப் பள்ளிகளுக்கு அத் தகைய சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அது நடைமுறைக்கு வந்துவிட்டது. கல்வித்துறைத் தலைவர் (D. P. I.) தம் 15 - 5 - 48, 31 - 5 - 48ம் நாட்களில் அனுப்பிய ஆணைகளே அவர்தம் செயலுக்கு உறுதுணையாகின்றன.

ஏன் இந்த வேறுபாடு? இங்கு உள்ள தெலுங்கர் பெறும் சலுகைகளை அங்குள்ள தமிழர் பெற்றால் என்ன கெட்டுவிடும்? வீணுகப் பல ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் - மாணவர்-தாய் மொழியை மறக்கச் செய்யும் இச் சதிச்செயல் அரசாங்கக் கண்ணுக்கு இதுவரை தெரியாவிட்டாலும், இனியாகிலும் அறிந்து ஆவன ஆற்றுமாறு அவ் வட்டத்திலுள்ள பெருமக்கள் எல்லாம் கல்வி அமைச்சர் அவர்களைக் கண்டு குறைகளைக் கூறியுள்ளார்கள். தமிழ் வளர்ச்சியில் கருத்துடைய அமைச்சர் - உண்மையில் தம் கருத்துச் சிறக்கவேண்டுமென்று கருதுவாரானால் தமிழர் எங்கிருந்தாலும் - சித்தூர் ஜில்லாவில் மட்டுமல்லாது - இருக்கும் இடங்களில் அவர்தம் தாய்மொழியில் அவர் கல்வி பெறுகின்றாரா என்பதைக் காணவேண்டும். இந்தத் திங்கள் முதல் வாரத்தில் அந்தச் சித்தூர் வட்டத்திற்குச் சுற்றுப் பிரயாணம் செய்யக் கல்வி அமைச்சர் செல்வதாக அறிகிறோம். நேரில் சென்று பார்க்கட்டும். எது நேர்மை என்பதை உணரட்டும். உணர்ந்து ஊற்றம் பொருந்திய செயலைக் காலம் தாழ்த்தாது செய்யவேண்டும் என அவரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்த வடக்கெல்லை நிலை இதுவானால், தெற்கே தென் திருவாங்கூரில் உள்ள தமிழர் அங்கு மலையாளிகளிடம் அல்லல் உறுவதாக அறிகிறோம். அரசாங்க ஆதிக்கமும் பிற ஆதிக்கங்களும் அவர்களை அல்லல்படுத்துகின்றன. அங்குள்ள தமிழ்க் காங்கிரஸ் தமிழ் நாட்டுக் காங்கிரசுடன் இணையவிழைகின்றது. இந்திய யூனியனில் திருவாங்கூர் இணைந்து விட்டது. மொழி வாரிப் பிரிவினை காங்கிரசில் ஏற்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்குச் சென்னை மாநிலம் ஒன்றானாலும் இதில் மொழிவாரியாகவே காங்கிரஸ் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே திருவாங்கூர்த் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்நாட்டுக் காங்கிரசுடன் ஏன் சேரவேண்டும் என்று கேட்பதுமுறை! நேர்மை! அதற்காக அவர்கள் நேரடி நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் தயங்க வில்லை என அறிகின்றோம். காமராஜர் போன்றார் இதில் கவலை கொள்ளாது கண் துடைக்க வழி தேடுவார்களானால் அவர்கள் பழிக்காளாவார்கள் என்றே சொல்லவேண்டும். அவரும் அது பற்றி அகில இந்திய காங்கிரசுக்குத் தகவல் அனுப்பியதாக அறிகிறோம். மகிழ்ச்சியோ, எனவே திட்டமாக, விரைவில் தென் திருவாங்கூராகிய தமிழ்ப்பகுதி காங்கிரஸ், தமிழ் நாட்டுக் காங்கிரசுடன் சேர, அகில காங்கிரஸ் சபையும் கலந்து ஆவன செய்வதாக!

# மீண்டும் குதிரைப் பந்தயம்

மதுவரக்கனைக் கருவறுத்த இம் மாகாண அரசாங்கம், ஏனோ குதிரைப்பந்தயத்தை மட்டும் கொட்டுமேளத்தோடு வரவேற்கிறது? மதுவால் விளையும் கொடுமையினும் மிகக் கொடுமை வாய்ந்த தன்று சூதுப் பந்தயம் என்று கூறி, இதைத் தடுக்காதது மட்டுமன்றி, அதற்குச் செல்ல விரும்புபவர்களுக்குத் தனி வண்டிகள் விட்டுச் சலுகையும் காட்ட அரசாங்கம் முன் வந்ததை எண்ண, உளம் நடுங்குகிறது. அரசுகள், நாட்டில் அல்லலை நீக்க வேண்டும் நிலைபோய், அவதிகளுக்குப் பக்கத் துணையாய் இருந்து அவற்றை வளர்க்க வழி கோலுகிற நிலையில் சொல்ல வேண்டாம் என, எச்சரிக்கின்றோம். குதிரைப் பந்தயத்தில் குலைந்த குடும்பங்கள் எத்தனை? கெட்ட குடிகள் எத்தனை? பட்டமக்கள் எத்தனை பேர்? கண்ணுக்குக் கண்ணெதிரே கடும் துன்பம் அதனால் விளைவது கண்டும் ஏனோ அதை நீக்க முன்வரவில்லை அரசாங்கம்? ஒருவேளை அரசாங்கத்துக்குத் துணையாயிருப்பவரும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களும் கூட அதில் பங்கு கொள்ளுகிறார்கள் என்ற காரணத்தால் அதை வளர்க்க முன்வந்து விட்டார்களோ என அஞ்சுகின்றோம். செல்வர்கள்தாம் தம் 'கார்'களில் சென்று கெட்டோ பட்டோ வருகிறார்களென்றால், ஏழைகளையெல்லாம் வலியத் தம் பஸ்ஸில் வருக என்று ஏற்றிச் செல்ல அரசாங்கம் அழைக்கிறதே! பதவி பெற்றதும் தொலைவதில் குதிரைப் பந்தயம் முதலிடம் பெறும் என்று அன்று பேசப்பட்டதே! இன்றோ பந்தயம் வெற்றி முரசுடன் அரசாங்கம் அரண்செய்ய நடைபெறுகிறதே! உண்மையில் அரசாங்கம் மக்களுக்கு-சிறப்பாகச் சென்னையிலும் சுற்றிலும் உள்ளவர்களுக்கு நன்மை செய்ய விரும்புமாயின் உடனடியாக இந்தப் பந்தயம் ஒழிக்கப்படவேண்டும். 'ஏழைபங்காள'ரென எண்ணிவரும் அரசாங்கம் இப் பந்தயத்தை உடன் ஒழித்து ஏழைகளுக்கு உதவி செய்ய முன் வருமாறுவேண்டுகிறோம்.

—

# சென்னையின் புதிய மேயர்

சென்னை மேயர் தேர்தல் முடிந்துவிட்டது. பலவகையில் தகுதிவாய்ந்த ஒருவர் மேயராக வந்ததை வரவேற்கின்றோம். பல பொது நிலையங்களில் பங்கு கொண்டுள்ளவரும், திறந்த உள்ளமும், சிறந்த பண்பாடும் உடையவருமான திரு. இராம சாமி நாயுடு அவர்கள் நகர சபைத் தலைவராக வந்தது சிறப்புக்குரியதாகும். அவரால் பயன்பெற்ற நிலையங்கள் பல. தமிழ் வளர்ச்சியிலேயும் அவருக்குப் பங்குண்டு. அவர்தம் தலைமையில் நகரசபை அடுத்த ஆண்டு பல அருங் காரியங்களைச் செய்தாக வேண்டும். சபையில் அவரை வாழ்த்திய அன்பர் பலர் அவர் முன் நிற்கும் பணியினை விளக்கியுள்ளார்கள். ஆம்! திரு. நாயுடு அவர் தம் ஓராண்டு ஆட்சியில் சென்னை பல நலன்களைப் பெறும் என எண்ணுகின்றோம். அவர் வாழ்க என்று வாழ்த்துவதோடு, அவர்தம் பணியும் பலவகையில் சிறக்க எனப் போற்றுகின்றோம்.

அத்துடன் அவருக்குத் துணைமேயராகத் திரு. பக்கிரிசாமி அவர்கள் வந்துள்ளார்கள் தொழிலாளர் தொண்டராக வந்த அவர், துணைமேயராக அமர்ந்து நகரில் உள்ள தொழிலாளர் நலனும் பிறர் நலனும் சிறக்கப் பணியாற்ற வேண்டுமென்று கூறி வாழ்த்துகின்றோம்.

---

## கட்டுரைப் போட்டி

தமிழ்நாட்டிலுள்ள (சித்தூர், திருவாங்கூர் பகுதி உட்பட) எல்லாப் பள்ளிகளிலும் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் (IV V & VI from Students) இதில் பங்கு கொள்ளலாம். நுழைவுக் கட்டணம் இரண்டணா. இதைத் தபால் பில்லையாக அனுப்பலாம் (காலணா பில்லைகளாக அனுப்புக). கட்டுரை 25-12-48க்குள் தமிழ்க்கலை அலுவலகத்துக்கு வந்துவிட வேண்டும். மாணவர் பெயர், வகுப்பு, வயது, படிக்கும் பள்ளி, ஊர், முகவரி முதலியன குறித்து, அத்துடன் தலைமை ஆசிரியர் அல்லது தலைமைத் தமிழாசிரியர் கை எழுத்து வாங்கி நுழைவுக்கட்டணத்துடன் அனுப்பவேண்டும்.

பொருள் :— "தமிழ்நாட்டின் வருங்காலம்". பிற தேவைகளுக்கு அலுவலகத்துக்கு எழுதுக.

சென்ற இதழில் வந்த மாணவர் சிறு கதைப் போட்டி முடிவு அடுத்த இதழில் வரும்.

பொறுப்பாளர்,

தமிழ்க்கலை, சென்னை - 10

# "அந்தியின் அழகு"

தி. திருமலை முத்துசுவாமி

கதிரவனும் மேற்றிசையை நாடி விட்டான்
காற்றிறைவன் களிகொண்டு பாடலுற்றான்
நதியருகில் மணல் மிசையே யானும் நின்றேன்
நாற்றிசையும் வானகத்தில் மாற்றம் கண்டேன்
மதியினுக்கோர் தெளிவூட்டும் மாலைத் தோற்றம்
மனத்திற்கே மகிழ்வூட்டும் மலர்கள் நாற்றம்
அதி விரைவாய்ப் புள்ளினங்கள் ஆற்றைத் தாண்டி
அணி யணியாய்ப் பறந்து செலல் கண்ணிற்கின்பம்.

ஆற்றினுடை நீரினிலும் அந்த நேரம்
ஆதவனின் பொற் கதிர்கள் படிந்ததாலே
மேற்றிசையில் முகிற் கூட்டம் ஒளிர்தல் போலே
மினுமினுத்தல் கண்டுள்ளம் சொக்கி நின்றேன்
ஊற்றி விட்ட செங்குருதி போன்ற வானில்
ஊர்ந்து செலும் முகிற் கூட்டம் தோற்றிற்றையே
நாற்றிசையும் வானகத்தில் செக்கர் கண்டே
நன்றிதுவோர் போர்க்களமே யென்றையுற்றேன்.

அக்கரையி லுள்ளவொரு நகரந் தன்னில்
அழகான மாளிகைகள் பொன்வேய்ந் தாற்போல்
மிக்கவெழில் நிறைந்தனவாய் விளங்கிற் றையே
மேதினியில் மாலையெனும் நேரம் நன்றே
பக்கத்தில் நின்றவொரு பாலத் தின்மேல்
பாட்டிசைத்துச் சென்றானோர் இடையன் கண்டேன்
எக்களித்துச் செல்லுமவன் முன்னே பார்த்தால்
எருதுகளின் கூட்டமொன்று சென்ற தாங்கே!

மலைவாயில் நாடிவிட்டான் சூர்ய தேவன்
மாடுகளும் மேய்ந்துவிட்டுத் திரும்பிற் றிங்கே
சிலைபோல நின்றேன் நான் இவற்றைக் கண்டே
சிந்தையெல்லாம் கொள்ளைகொண்டாள், மாலைப் [பெண்ணும்
கலைந்ததெந்தன் சிந்தனையும் இருளைக் கண்டே
காலத்தில் மற்றுமொரு மாற்றம் பாரீர்
அலையலையாய் இருள்வானை மூடிற் றேமால்,
அகன்றேன்யான் அங்குவிட்டு வீட்டை நோக்கி.

# கொடுங்கோன்மை

வல்லரசு நாடுகள்தாம் கூட்டம் கூடி
வகுக்கின்றார் நீதிமுறை கணக்கே யின்றி
சொல்லரசு வீற்றிருக்க வழிதான் கண்டார்
சுதந்திரத்தின் அறிகுறியை இன்னுங் காணார். 1

எந்நாடும் நிலவுலகில் சமமே என்றே
இடிமுழக்கம் செய்கின்றார் எண்ணி லாதோர்
இந்நாடு ஜப்பானும் ஏனோ இன்றே
இழிவுபட்டு, இடர்ப்படுதல் வேண்டு மின்று ? 2

செயித்துவிட்ட நாடுகள்தாம் தோற்ற நாட்டைத்
திணரடித்து, தொழில்பறித்து, நசுக்கி விட்டு
எய்திவிட்டோம் ‘ சமதர்ம நெறியை ’ என்றே
ஏமாற்று வித்தை செய்தல் சரியோ இன்று ? 3

தந்நாடு அவலநிலை அடைதல் காணச்
சகிக்காது தலைமைதனைத் தாங்க வந்த
நந்நாடு போற்றுமந்த டோஜோ வீரன்
நண்பர்களும் மடியமுறை வகுப்ப தென்ன ? 4

நிறத்திமிரை வாலிபர்கள் நரம்பில் ஊட்டி
நேர்மையுடன் அன்னியரை விரட்டி ஓட்டி
அறத்துமுறை கொண்டுஜப்பான் நன்கு வாழ
அறவுரைகள் போதித்தால் குற்ற மாமோ ? 5

அணுகுண்டை எறிந்தபாவி அமெரிக் காவை
அமைதிமன்றம் ஏதுமின்றி விட்ட தேனோ ?
மனுகண்ட குலத்துக்கோர் நீதி செப்பும்
வழக்கமதைக் கைக்கொண்டீர் போலும், போலும்!

நிகழ்கால வல்லரசர் நீதி சொல்லின்
நேர்மையுள்ள ‘ டோஜோவை ’ எந்நா டும்பின்
புகழ்காலம் வரும்காண்பீர், மறந்தி டாதீர்
பொன்றிவிடும் மறமாட்சி என்றார் பர்லே ! 7

குற்றமற்ற நாடுஒன்றும் உளதோ ! ஆயின்
கூறிடுவீர் அதன்நீதி இன்றே சொல்வேன்
கற்றிருந்தும் விலங்கறிவு படைத்து வாழ்வீர்
காண்கின்றீர் தன்னலத்தைப் புன்கண் கொண்டு. 8

ப. இராமன்

# அறிவும் அறமும்

(அ. மு. ப. ஈப்போ திருவள்ளுவர் விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.)

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு' என்று தமிழ் நாட்டின் ஏற்றத்தைப் பாடினார் பாரதியார். வள்ளுவன் பிறந்ததனாலே தமிழ் நாடு ஏற்றமுற்றது. தமிழர் நலம் பெற்றனர்; தமிழ் தலைநிமிர்ந்தது. அவ் வள்ளுவன் வாய்மொழி, பொய்யா மொழியாக என்றும் புவியில் நிலைத்து நிற்கும் நிலை பெற்றது. சாதி, சமய, மொழி, நாட்டு வேற்றுமைகளைக் களைந்து அவனது அருஞ் சொல் வாழ்கின்றது. உலகெங்கணும் வள்ளுவனை அறியா அறிஞர் இருக்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது. அவ் வள்ளுவனைத் தமிழ்மக்கள் இதுவரையில் போற்றாது விட்டிருந்த போதிலும் இன்றாவது போற்றத் தலைப்பட்டனர். தமிழ் நாட்டில் வாழும் தமிழர் மட்டுமின்றி உலகிடை எங்கும் வாழ் தமிழ் மக்கள் வள்ளுவனை உள்ளம் போற்றும் ஒரு நிலை எய்தியது கண்டு உண்மைத் தமிழன் உளமகிழ்வான்.

கடல் கடந்த மலேயாநாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் வள்ளுவன் விழா கொண்டாடப்படுகிறது. இந்த வள்ளுவன் விழாவின் நான் கூற நிற்பதெல்லாம் வள்ளுவன் அறிவையும் அறத்தையும் எவ்வாறு உலகுக்குக் காட்டினான் என்பதேயாகும். அறமும் அறிவும் தமிழர் தம் பண்டை வாழ்வு - தொண்டு உலகிடைப் பயின்றுள்ளன வாகும். அறவாழ்வுவாழ அறிவு நலம்பெற்ற தமிழன் அன்று தொண்டு வழிகண்டு கொண்டுதான் இருக்கின்றான். அந்த அறவழி - அறிவுநலன் மற்றெல்லா நூல்களைக் காட்டிலும் வள்ளுவன் திருக்குறளில் நன்கு விளக்கப் பட்டுள்ளது. பிற தமிழ் நூலகளிலும் அறிவும் அறமும் போற்றப்படுவதை அறிஞர் அறிவர். தமிழ் நூல்கள் மட்டுமன்றிப் பிற எல்லா மொழிகளிலும் கூட, அவ்வவற்றின் நூல்களிலும் கூட அறிவும் அறமும் விளக்கப் பட்டுள்ளன. இன்றைய உலகில் கூட இந்த இரண்டையும் பற்றிப் பேசாத நாடே கிடையாது. ஆயினும் வள்ளுவன் இந்த இரண்டுக்கும் தந்த விளக்கம் வேறுயாரும் இதுவரைத் தரவில்லை. உண்மையிலே இந்த இரண்டு சொற்களுக்கு - அறிவுக்கும் அறத்துக்கும் - வள்ளுவன் கண்ட பொருளை இன்று உலகம் காணுமாயின் பயன் உண்டு! அன்றேல்.........

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்களுக்கு அறிவு இன்றியமையாதது. மக்களைப் பிற விலங்கினின்று வேருகப்பிரித்துச் சிறந்தவனாக்குவதே இந்த அறிவுதான். அறிவைப் பறித்தறிவு என்று கூறுவர். நல்லது தீயது நாடிச் செய்யவேண்டியவற்றைக் கொள்ள

லும் தள்ளவேண்டியவற்றை நீக்கலும் இந்த அறிவினாலேயே மேற்கொள்ளப்பெறும். எனவே உலகில் மனிதனாய் வாழ அறிவு இன்றியமையாதது. ஆனால் அந்த அறிவு யாது? விலை கொடுத்து வாங்கும் ஒரு விற்பனைப் பொருளா? படித்துப்பெறுகின்ற ஒரு பண்பா? என்று எண்ணத்தோன்றும். படிக்கப்படிக்க அறிவுவளரும் என்பது உண்மை.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு'

என்றான் வள்ளுவன். பயிலப் பயில அறிவுவளரும் என்பதை நல்ல உவமையினால் விளக்குகிறான். மணலில் தோண்டத் தோண்ட நீர் சுரக்கும். அது போன்று படிக்கப்படிக்கப் அறிவு வளரும். ஆனால் படிப்பது எதை? எதைப் படித்தாலும் அறிவு வளருமா? அப்படியானால் இன்று உலகில் நடக்கின்ற தீச் செயல்கள் அனைத்துக்கும் படித்தவரும். காரணமாகின்றனரே. கல்லாதபேர்களே நல்லவர்கள் என்று உலகம்பழிக்கும் அவுளக்குக் கல்வி பயன்படுகிறதே எனப் பலர் வினவலாம். அறிவு தீங்குசெய்யத்தான்பயன்படுமா என எண்ணலாம். ஆனால் படிக்க வேண்டியதையும் வள்ளுவன் வரையறுக்கின்றான்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்பது அவன்மொழி. எனவே படிக்கத்தொடங்குமுன்பே அறிவு வளர்க்கும் அருங் கலைகள் எவை எவை என்பதை ஆராய்ந்து பயிலல் வேண்டும். அத்தகை நலஞ்சான்ற நல் இலக்கியங்கள் உண்மையில் அறிவை வளர்க்கும் என்பது உறுதி!

'இனி, அறிவு என்பது யாது என ஆராய்வாம். அறிவு மனிதனை வாழவைப்பது. அறிவு அல்லலைநீக்க அருமருந்தாவது. அறிவு அஞ்சி அரண் அமைக்கவில்லை. அறிவு இருந்தால் அனைத்தும் இருக்கும், அறிவு இன்றேல் பிற அனைத்துச் செல்வங்கள் பெறினும் பயனில்லை. இக்கருத்தைத்தான் வள்ளுவர்,

'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்'

என்று அறுதியிட்டுக் கூறிப்போந்தார். எனவே உலகில் மனிதன் மனிதனாக நிலைபெறவேண்டுமாயின் அறிவு இன்றியமையாதது. அவ்வறிவு கல்வியினாலே வளர்க்கப் பெறுவது என்பது பெற்றாம். ஆனால் வெறும் புத்தகப் படிப்பால் மட்டும் அறிவு வளர்ச்சியுறாது. இன்று நம் நாட்டில் கல்வித்துறையில் அறிவு—நூலறிவு—தேர்வு அறிவு ஒன்றே காண வேண்டுமே ஒழியப் பிறவற்றைப் பார்க்கலாகாதெனப் பலர் பேசுவதைக் கேட்கின்றோம். ஆனால் உண்மையில் அப்படிப் பேசுவார்கள் அறிவைச் சரியாக விளங்கிக்கொள்ளாதவர்களென்று திட்டமாகச் சொல்லலாம். அறிவு வெறும் நூலால்

மட்டும் ஆவதாயின் நாம் முன் காட்டியபடி இன்று நாட்டிலும் உலகிலும் உண்டாகும் அல்லல் அனைத்துக்கும் அப்புத்தகம் பயின்ற அறிவுடையார் காரணமாக ஏன் நிற்கவேண்டும், வெறும் புத்தக அளவிலே நின்று நூற்றுக்கு நூறு தேர்வெண் பெறுகின்ற வன் அறிவாளனாயின் அவன் பிறகு அவ்வறிவை மேலும் வளர்க்கப் பயன்படுத்தாமலும் மற்றவர்களுக்கு விலை கூறும் முறையில் வேலை தேடித்திரியக் காரணம், என்ன? அறிவு, நூலறிவுக்கு அப்பாற் பட்டது. கற்றனைத் தூறும் அறிவு என்றாலும், அக் கற்பது நூலோடு அமையவில்லை.

உலகம் பரந்து கிடக்கின்றது. உலகம் நாள்தோறும் மாறிக் கொண்டே வருகின்றது. உலகில் பல அறிஞர்கள் நூற்றாண்டு தோறும் தோன்றி வளர்ந்து அறிவுரை பல பகர்ந்து வழிகாட்டிச் செல்கின்றார்கள். கடைசியாக வாழ்ந்த காந்தியடிகள் நம் நாட்டு அறிவை—உலக அறிவைத் துலக்கினார். ஆகவே உலகம் அத் தகைய அறிவுடையோரையே நாடுகிறது. இன்றைய அநாகரிகப் போர்புரி உலகம் ஒரு வேளை வெறுக்கினும், முடிவு அங்குவர வேண்டுவதே! 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றார் தொல்காப்பிய னார். எனவே உலகம் உயர்ந்தாரைச் சார்ந்து உருவாகின்றது. அந்த உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றலும் கல்வியாகும். ஏதோ கற்றுத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் தாம் அறிவாளிகள் என்றும், அவர்களுக்கே உலகில் முதல் இடம் வேண்டும் என்றும் கூறுவது வள்ளுவனார் விருப்பன்று.

> 'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்'

என்றும்,

> 'எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
> டவ்வ துறைவ தறிவு'

என்றும் உலகத்தொடு ஒட்ட ஒழுகுதலே அறிவென்பதை நன்கு விளக்கிக் காட்டிவிட்டார். ஆகவே வெறும்படிப்பினை மட்டும் அறிவென்று போற்றாது, உலகம் செல்லும் நெறிகண்டு, அதன் வழியே தாமும் இலங்கி வாழ்தலே அறிவு என்பது பெற்றாம்.

இனி, அவ்வாறு உலகத்தை நோக்கி வாழ்தலே அறிவு என்று வள்ளுவர் ஏன் கூறினார் என எண்ணத் தோன்றும். உலகில் பல கோடிமக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுள் வாழ்வின் தேவை யைப் பெற்று வாழ்கின்றவர் மிகச் சிலரே யாவர். வாழ்வுக்கு இன்றியமையாத உணவும், உடையும் :உறையுளும்கூடப் பெறாத மக்கள் கூட்டம் பெரும்பான்மையாக நம்நாட்டில் உண்டு. அவர்கள் இடையிலே உல்லாச வாழ்வில் ஒய்யாரம் பாடும் ஒரு சிலரும் உண்டு. மக்களாகப்பிறந்தவர்களுள் ஏன் இந்த வேறுபாடு? இதை எந்தக் கற்ற உள்ளமாவது சிந்தித்ததா? சிந்தித்தா? புத்தர், தம் வாழ்வை விட்டு வழிகாணக் காடடைந்தார் சிந்தித்த

இயேசு சிலுவையில் மாண்டார். ஆம்! இன்று நம் கண்ணெதிரிலே சிந்தித்த காந்தியார் நம்மவராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். உலக வாழ்வுக்குச் சிந்தை செய்வார் பெறும்பயன் இவ்வளவுதான். இது வரலாறு காட்டுகின்றது. ஆனால் அதற்காக உளமுடையாது உலகம்எப்படியும் அன்பில் வாழவேண்டும் என்று எண்ணி, அதற்கு வேண்டும் ஆக்கப் பணிகளை ஆற்றுவதே அறிவுடைமையாகும். அறிவு அறிவு என்று தேர்தலிலே வெற்றி பெற்றுச் சிறப்பதிலும், அறிவு அறிவு என்று விஞ்ஞான வளர்ச்சியை ஆக்கப் பணிக்குப் பயன் படுத்தாது அணுகுண்டு முதலிய அழிவுக்குப் பயன்படு கருவிகள் செய்வதிலும் காலம் கழிக்கும் உலகுக்கு ஒருவேளை இந்த அறிவு - எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் அறிவு'-கேலிக் கூத் தாக இருக்கலாம். ஆனால் வள்ளுவன்-அன்றைய தமிழன்-அறிவை அங்கேதான் கண்டான். தான் எவ்வாறு எல்லா நலன்களும் பெற்று வாழவிரும்புகின்றானோ அவ்வாறே எல்லா மக்களும் - ஏன் உயிர்களும் கூடப் பெற்று வாழவேண்டும் என்பதில்தான் உண்மை அறிவு தோன்றும்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன்'

அறிவுநிலை வேண்டினார் தாயுமான அடிகள். அறிவைப்பற்றி நல்விளக்கம் கூறும் வள்ளுவனார்.

'அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'

என்றும்,

'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்றும்,

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'

என்றும் பலவாறு அறிவை விளக்குகின்றார். நாம் மேலே காட்டிய படி நூல்வழிபெறும் அறிவும் இந்தச் சீரியகொள்கையை வலியுறுத் துவது என்பதை 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை, படுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்று கூறிச் செல்கின்றார். எனவே அறிவு என்பது தன்னைப்போல் மற்றவரை ஒத்து நோக்கு தலே என்பது தேற்றம்.

'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்பது யாவரும் அறிந்த ஒரு மொழி. அறிவுபெற்றவர் ஒரு சாரார் வாழ மற்றவர் வாட வேண்டும் என்று எண்ணுவார்களேயாயின் அவர் அறிவு பெற்றதால் பயன் இல்லை. தன் வாழ்க்கைமட்டும் சிறந்தால் போதும், மற்றவர் வாழினும் வீழினும்என்' என்று எண்ணுபவர் எவ்வளவு நூலறிவு பெற்று நுண்மான் நுழைபுலம் பெற்றவரா யினும் அவரால் உலகுக்கு என்ன பயன்? உலகம் ஒருவரை ஒருவர்

பற்றி வாழ வழிகாட்டி யுள்ளது. எவன் ஒருவனும் தான் தனியாக மற்றவர் உதவி இன்றி உலகில் வாழமுடியாது என்பது அனைவரும் காண்கின்ற உண்மை. இத்தகைய உலகத்தில் சுயநலத்தோடு - தன்வாழ்வை மட்டும் கருதும் கருத்தோடு வாழும் ஒருவன் அறிவுடையவனாகத் திட்டமாக இருக்கமுடியாது.

செல்வம் பெறுவதும் அஃதில்லாதிருப்பதும் அவரவர் முயற்சியையும் சுற்றுச்சார்பினையும் பொறுத்தது. பெற்ற செல்வத்தை என்ன செய்யவேண்டும் என்பதே அறிவு காட்டவேண்டுவது. செல்வம்பெற்றார் பலர் செய்யத்தகாத கொடுஞ்செயல்களெல்லாம் செய்து சீக்கிரமே மண்ணாவதைக் காண்கிறோம். செல்வம்பெற்றார் சிலர் தாமும் துவ்வாது பிறர்க்கும் பயன் தாராது அச் செல்வத்தை வைத்து வறிதே கழிக்கின்றனர். அவர்கள் அச் செல்வத்தால் ஆக்க வேண்டுவதை அறியாதவர்கள். ஆக்கவேண்டுவது யாது? 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே ஆகும். இந்த ஆக்கப்பணியை அறியாதவர்கள் அறிவற்றவர்கள். எத்துணைச் செல்வம் பெறினும் நல்லாறு அறியாது செம்மாக்கும் செல்வர்கள் அறிவுற்றவர்களேயாவர்.

'அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்'.

என்றான் வள்ளுவன். எனவே பெற்ற செல்வத்தாலோ பிறவகையாலோ தமக்கும் பிறர்க்கும் ஆவனவற்றை அறிந்து அவற்றைப் பயன் படுத்தலே அறிவுடைமையாகும். அன்றி மற்றவர் வாட வாட அவர் பயன்கொண்டு தான் மட்டும் வாழ வாழ வழிவகுப்பானாயின் அவன் 'என்னுடைய னேனும் இலன்' என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாகவே நிற்பன்.

அறிவின் நிலை சற்று மேலே செல்லுகின்றது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் அறிவென்ற வள்ளுவனார் அதற்கு மேலும் செல்கின்றார். தீங்கிழைக்கும் மாற்றானுக்கும் பதிலுக்குத் தீமை செய்யாதிருத்தலே அறிவு என்கின்றார். 'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை, ஆந்துணையும் காப்பர் அறிவுடையோர்' என்றார் ஔவையார். ஆம் அறிவுடமை என்பது தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்தலிலேயேசிறக்கும். 'உன் ஒருகன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு' என்பது உயர்ந்த அறிவுடைமை யன்றோ! கொல்லவந்தவனையும் - குண்டிட்டவனையும் ஊறு செய்யலாகாது என்று ஒதுக்கிய நலம் அறிவின்பாற் பட்டதன்றோ? அத் தகைய அறிவு, அனைத்திலும் மேலானது. தமக்கு எத்துணை இடர்வரினும், யார் இடர் இழைப்பினும் அதற்கு மாறாக அவர்களுக்கு இடர் இழைக்க எண்ணுவது அறிவுடமை யாகாது. சாந்துணையும் தீங்கிழைத்தவராயினும், அவர்க்குத் தம்மாலான வரையில் உதவுவதே அறிவுடைமையாகும்.

'அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்பது வள்ளுவன் வாக்கு. வள்ளுவன் தலை என்று - சிறந்த ஒன்

றிழைக் கொள்ளுவதெல்லாம் மற்றஉயிருக்கு எவ்வகையானும தீங்கு செய்யா திருத்தலேயாம். இக்கருத்துப் பற்றி அவன் வாழ்க்கையில் பலகதைகள் ஏற்றிச் சொல்வார் பலர் உளர். கதைகள் உண்மையோ அல்லவோ அவன் கருத்து உயர்ந்தது. ஆம். அறிவு பலவகையாகப் பிரிக்கப் படலாம். நூலறிவும், நுண்ணறியும், பிறஅறிவும் என்று இன்று பலரால் பேசப்படுவது போன்று அறிவு பலவகையாகலாம். அப்படி ஆனாலும் கூட அவற்றின் உச்சியில் தலையாய அறிவாக விளங்குவது தீங்குசெய்தவர்க்கும் நன்மை செய்தலாகும். தீமையை, மறந்தும் மாற்றானுக்குச் செய்யாதிருப்பதாகும்.

> 'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
> மாணா செய்யாமை தலை'

என்ற குறளும் இதுபற்றி எழுந்ததேயாகும்.

> 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு'

என்ற குறளும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

எனவே இத்தகைய நல்லறிவோடு, எல்லோரையும் ஒத்து நோக்கி, எல்லா உயிரும் வாழவேண்டும் என்ற சிறந்த கருத்தோடு வாழ எண்ணுபவனே மனிதனாவான் என்பது வள்ளுவர் கருத்தாகும். வெறும் நூலறிவோ பிற அறிவுகளோ அறிவென்று பேசுதற்கும்கூடத் தேவையற்றன என்பதும், இன்றைய உலகில். இவ் வள்ளுவன் கருத்து எவ்வாறு போற்றப்பட வேண்டும் என்பதும் தெற்றென விளங்குகின்றன.

புத்தக அறிவே போதுமான அறிவாயின், நம் நாட்டினும் நன்குபயின்ற மேனாட்டில் - புத்தக அறிவு அதிகமாகப் பொருந்தியுள்ள மேனாட்டில் ஏன் அவதியும் அல்லலும் மிஞ்சியிருக்கக் காண்கின்றோம். போர் அமைப்பவர்களெல்லாம் கல்லாதவர்களா! அணுகுண்டை ஆக்கியவர்கள் அறிவற்றவர்களா? மறுபோருக்குவழியோ என்று வாதிடுபவர்களெல்லாம் படியாதவர்களா? இல்லை. படித்தவர்கள்தாம். பல்கலைக் கழகப்பட்டம்பெற்றவர்கள்தாம். ஆனாலும் அறிவின் அடிப்படை அவர்களுக்கு வெகுதூரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொருவர் உள்ளத்தும் தாம், தம் நாடு, தம் இனம் என்ற பற்று உண்டாகிறது. அழித்தோ, அடக்கியோ பிறரைத் தம்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற கொந்தளிப்பு உள்ளத்தில் உரம் பெறுகின்றது. எல்லாரும் இன்புறறிருக்க வேண்டும் என்ற அறிவின் அடிப்படை அங்குச் சுட்டெரிக்கப்படுகின்றது. படித்தவன் அறிவாளி என்ற பகட்டுத் தலைவிரித்தாடுகிறது. இந்த நிலை ஒழிய வேண்டும். அறிவு என்பது வள்ளுவர் காட்டியபடி மாற்றார்க்கும் தீங்கெண்ணா வகையிலே முகிழ்க்க வேண்டும். பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றிப்புரக்கும் பொய்யல்லா மெய்ந் நெறியிலே பூக்க வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகி, உலகம் என்பதும் தாமும் தம்மைச் சேர்ந்த இல

செல்வர்களும் தான் என்ற அளவில் நினையாது, அனைவரும் உலக் மக்கள் என்ற உணர்வில் அவர்கள் எல்லாரிடத்தும் இரங்கி, பெற்றது கொண்டு மற்றவரையும் சுற்றத்தையும் அருத்தி வாழும் வழியில் சிறக்கவேண்டும். அந்த உண்மை அறிவில் அறம் விளங்கும். அறம் விளங்க அவதி குன்றும். இன்று உலகிடைக் காணும் எல்லா வேறுபாடுகளும் இல்லையாக முடியும். உலகமக்கள் அனைவரும் ஒன்றே என்ற உணர்வில் 'எல்லாரும் எல்லாச்செல்வமும் பெற வழி வகுக்கத் தோன்றும். என்று அந்த வழி 'வகுக்கப்படுகிறதோ அன்றுதான் உலகம் உண்மையில் அறிவு வழியில் செல்வதாக அறிஞர் கூறுவர். அதுவரையில் உலகம் வேறு எங்கோ சென்றுகொண்டிருக்கிறது என்பது தான் பொருள்.

இனி, அறிவு வழியில் அறம் பெருகும என்றோம். இத்துணை விரிந்த அளவில் அறிவினைக் கண்டபின் அறத்தைப் பற்றி விளக்கத் தேவையில்லை. அறம் அறிவின் வழி அமையின் அதன் அடிப்படையில் செல்வர் வறியர் என்றவேறுபாடு இல்லை. ஏன்? எல்லோரும் அறத்தாற்றின் வாழ்வார்கள். அறன் என்பதும் அறிவு என்பதும் பொருளில் ஒன்றாகவே சென்று முடியும். அறிவு எப்படி மற்றவர்களுக்கு உதவ வழிகாட்டுகிறதோ அது போன்று அறமும் அதையே வலியுறுத்துகிறது. இல்லறமா துறவறமா சிறந்தது என எண்ணுகின்ற வள்ளுவனார், தனக்கென வாழும் துறவறத்திலும் பிறர்க்கென வாழும் இல்லறமே பெரிது எனக் காண்கின்றார். எனவே 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்றார். அவ்வறத்தின் சிறப்பைஅடுத்துக் காண்போம்.

---

## தமிழ்க்கலை அடுத்த இதழ்

அடுத்த இதழ் பொங்கல் இதழாக வருகின்றது. ஆகவே 10 - 1 - 49ல் வெளிவரும். ஆகவே சாதாரண இதழ் 1 - 2 - 49ல் வரும். பொங்கல் இதழ் சந்தாதாரர்களுக்கு அனுப்பப் பெறும். அதற்கென முன்பணம் கட்டிய விற்பனையாளர்களுக்குத்தான் அனுப்பப் பெறும். தேவையானவர்கள் குறித்த விலை கொடுத்து அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பொறுப்பாளர்,

தமிழ்க் கலை

நம்நாட்டில் என்ன பாடுபட்டும் விவசாயம் வளரவில்லை என்று அரசாங்கத்தாரும், பிறரும் எழுப்பும் ஒலி எங்கும் கேட்கிறது. இதோ ஆங்கில நாட்டில் விவசாயப் பண்ணைகள் போற்றப்படும் விதத்தைக் காட்டுகின்றார் அந்நாட்டு ஆசிரியர் ஒருவர். எதை எதையோ அவர்களைப் பின்பற்றும் நம்நாடு இதைப்பின்பற்றினால் பயன் உண்டு. 'அரசாங்க ஆணைவழி விவசாயம் இல்லையேல் நிலம் அரசாங்கத்துக்கு' என்பதே இறுதிக்கட்டம். இதைச் செய்ய முன்வருமா?

# பிரிட்டிஷ் விவசாயப் பண்ணைகளின் நிர்வாகம்

எல். எப். ஈஸ்டர் புரூக்

பிரிட்டனில் கவுண்டி விவசாய நிர்வாகக் கமிட்டிகள்மூலம் நடைபெற்றுவரும் விவசாயத் தொழில், ஜனநாயக சுய ஆட்சி என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிவருகின்றது. நிலங்களின் நிர்வாகத்தை அவைகளில் வதியும், வேலைசெய்யும் விவசாயிகளின்மூலமாக நடைபெறச் செய்வதற்காகத்தான் கவுண்டி விவசாய நிர்வாகக் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கமிட்டிகள் விவசாயியின் தேசபக்தியையும், விவசாய மந்திரியாலயத்தைச் சேர்ந்த கவுண்டி ஆலோசக அதிகாரிகளின் உவமையற்ற திறமையையும்தான் நம்பியிருக்கின்றன.

இங்கிலாந்து வேல்ஸிலுள்ள ஒவ்வொரு கவுண்டியிலும் நிலச்சொந்தக்காரர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. இக்கமிட்டியின் அங்கத்தினர்களுக்கு எவ்விதமான ஊதியமும் வழங்கப்படுவதில்லை. கவுண்டி ஆலோசக அதிகாரிகளும், நுணுக்க நிபுணர்களும் இக்கமிட்டிக்குத் தேவைப்படும் ஆலோசனைகளையும், உதவியையும் செய்துவருகின்றனர். இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமானபொழுதுதான் முதன்முதல் இவ்வித கமிட்டிகள் நிறுவப்பட்டன. அதுபோது இவை நன்கு பணியாற்றியதால் யுத்தப் பிற்காலத்திலும் இவைகளை - சில திருத்தங்களுடன் - தொடர்ந்து நீடித்துவருவதென அரசாங்கம் முடிவுசெய்தது.

ஒவ்வொரு கமிட்டியிலும் 12 அங்கத்தினர்கள் உள்ளனர். கவுண்டி கமிட்டிகளின்கீழ் ஜில்லா கமிட்டிகளும் வேலைசெய்துவருகின்றன. இந்த ஜில்லா கமிட்டிகள் அந்தந்த ஜில்லாவிலுள்ள பொதுஜன சேவையில் ஆவல்கொண்டுள்ள விவசாயிகளால் நடத்தப்படுகின்றன. கவுண்டி கமிட்டி அங்கத்தினர்கள் இந்த ஜில்லா கமிட்டிகளின்மூலம்தான் தெரிந்

தெடுக்கப்படுகின்றனர். விவசாயத் தொழிலைப் பொறுத்தவரை யுத்த காலத்தின்போது இக் கமிட்டிகள்தான் நாட்டின் முதுகெலும்பாக விளங்கிவந்தன.

இக் கமிட்டிகளிலுள்ள அனைவரும் ஸ்தல நிலவரங்களை நன்கறிந்த விவசாயிகளானதாலும், தங்களைப்போன்ற இதர சகோதர விவசாயிகளைப்பற்றி அவர்கள் நன்கு தெரிந்திருப்பதாலும் இக்கமிட்டிகள் தங்களுடைய அலுவல்களை வெற்றிகரமாகவே நிறைவேற்றிவருகின்றன. இவற்றின் அங்கத்தினர்கள் விவசாயத் தொழிலாளர்களுடன் நன்கு பழகி ஹாஸ்யமாகப் பேசி அவர்களிடமிருந்து நல்ல பலனும் பெற்று வருகின்றனர்.

## உத்தரவாதமான விலை

விவசாயத் தொழில் தன் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி வைக்கும் என இதர சமூகத்தினருக்கு ஓர் உத்தரவாதம் அளிப்பது போல் கவுண்டி ஜில்லா கமிட்டிகள் வேலைசெய்துவருகின்றன. விவசாயி உற்பத்திசெய்யும் பொருள்களுக்கு நல்ல விலையும் நல்ல மார்க்கட்டும் கிடைக்குமென அரசாங்கம் உறுதிமொழி அளிக்கிறது. காலத்தை விரயமாக்காமல் தம் சக்திக்கு முடிந்தவரை உற்பத்திசெய்து அனுப்புவதாக விவசாயத் தொழிலாளர்கள் இக் கமிட்டிகளின்மூலம் அரசாங்கத்திற்குப் பதில் உத்தரவாதம் அளிக்கின்றனர்.

அடுத்த ஆண்டு பிரிட்டனுக்கு 5,00,000 ஏகரா நிலங்களின் கோதுமை அவசியம் தேவைப்படுகிறதென்று அரசாங்கம் அறிவித்ததால் மேற்கூறிய கமிட்டிகள் அதை எய்துவதற்கான வழிதுறைகளில் உடனே கவனம் செலுத்த ஆரம்பிக்கின்றன. முதலில் ஒவ்வொரு கவுண்டியும் ஒரு குறிப்பிட்ட 'கோட்டாவை' உற்பத்தி செய்வதெனத் தீர்மானிக்கிறது. கவுண்டி கமிட்டிகள் தம் திட்டங்களை ஜில்லாக் கமிட்டிகளுக்கு அறிவிக்கின்றன. ஜில்லாக் கமிட்டிகள் (இக்கமிட்டிகளில் அந்தந்த ஜில்லாவிலுள்ள சகல விவசாயிகளின் பிரதிநிதிகளும் அடங்கியிருப்பதால்) ஒவ்வொரு ஊராகச் சென்று கவுண்டி கமிட்டித் திட்டங்களை விவசாயிகளுடன் விவாதிப்பதுடன் அவைகளை உடனடியாக அமல்செய்யவேண்டியதன் அவசியத்தையும் நன்கு எடுத்துரைக்கின்றன.

அநேகமாக ஒவ்வொரு கமிட்டியும் தனது நிர்வாகத்தின் கீழுள்ள ஒவ்வொரு விவசாயப்பண்ணையும் கூடுமானவரை எல்லாவற்றையும் உற்பத்தி செய்வதற்கான வழியிலேயே அதிக ஊக்கம் அளித்துவருகின்றது. உதாரணமாக கால்நடைகளின் தீவனம் குறைவாக உள்ள இடங்களில் புல் வெளிகளை அபிவிருத்திசெய்யும்படி விவசாயிகளைத் தூண்டிவருகிறது; அல்லது பால் அளவு குறைந்திருக்கும் இடங்களில் பால் அளவை அதிகரிக்க அதிகமான தீவனம் உற்பத்தி செய்வதற்

கும், அதிக கால்நடைகளைப் பராமரிப்பதற்கும் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் கூறுகின்றது.

இவைகளைத் தவிர உணவுப்பொருள் உற்பத்தியில் நாட்டின் தேவைகளை மனதிற்கொண்டு அரசாங்கத்தின் பொது விவசாயத் திட்டங்களை வெற்றிகரமாக அமலில்செய்வதற்கான நடவடிக்கைகளிலேயே ஒவ்வொரு கமிட்டியும் அதிக கவனம் செலுத்துகின்றது. நாட்டில் உணவுப் பொருள்களின் நிலைமை நல்முறையில் அபிவிருத்தி அடையுமானால் கோதுமை, உருளைக்கிழங்கு முதலியவைகளின் உற்பத்தியை விட, கால்நடைகள் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்த ஆரம்பிக்கும்.

ஒழுங்கான விவசாயிகள் அவரவர்களின் சொந்தவழியிலேயே விடப்படுகின்றனர். அவர்களுடைய அன்றாட வேலைகளில் எவரும் தலையிடுவதில்லை. மத்திய ரக விவசாயிகளாயிருந்தால் கமிட்டி அங்கத்தினர்கள் அடிக்கடி பண்ணைகளுக்கு விஜயம்செய்து அவர்களிடமுள்ள குறைபாடுகளை எடுத்துரைத்து திருத்திக்கொள்ளவேண்டுமென்று சாந்தமாக உணர்த்துகின்றனர். மோசமான விவசாயிகள் விஷயத்தில்தான் கமிட்டிகள் அதிக கவனம் செலுத்துகின்றன. தங்களுடைய பழைய கெட்ட வழிகளைக் கைவிடாமல் ஜில்லா கமிட்டிகளிலுள்ள தங்களுடைய சகோதர விவசாயிகளின் புத்திமதிகளையும் தொடர்ந்து அலட்சியம் செய்துவரும் விவசாயிகள் கமிட்டியின் கண்காணிப்பில் வைக்கப்படுகின்றனர்.

இவ்விதமான நடவடிக்கைகளுக்குப் பின்னும் அவர்களிடம் திருந்துவதற்கான அறிகுறி தென்படவில்லையானால் இறுதியான நடவடிக்கையாக அவர்களை விவசாயப் பண்ணைகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமெனக் கவுண்டி கமிட்டிகள் விவசாய மந்திரியாலயத்திற்கு யோசனை கூறமுடியும். அதிகப்படியான ஜனத்தொகையும் குறைவான நிலங்களுமுள்ள பிரிட்டனைப்போன்ற ஒரு நாடு தன் நிலங்கள் தாறுமாறாக உபயோகிக்கப்படுவதை ஒருகாலும் அனுமதிக்க முடியாது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது 3000க்கும் அதிகமான விவசாயிகள் இவ்விதம் பண்ணைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

## நிலச்சொந்தகாரரின் கடமைகள்

கமிட்டியின் ஆலோசனைகளை வேண்டுமென்றே அலட்சியம் செய்தாலன்றி எவ்வளவு மோசமான விவசாயிக்கும் திருந்துவதற்கு ஒரு வருடகால அவகாசம் அளிக்கப்படுகிறது. திருத்தமுடியாத நபர்களென்று கமிட்டி கருதுமானால் அவர்கள் வெளியேறித்தான் ஆக வேண்டும். இதற்கு வேறுவழி எதுவுமில்லை. இவ்விதம் வெளியேற்றப்படும் விவசாயிக்கு பாரபக்ஷமற்ற விசேஷ நீதிமன்றத்தில் அப்பீல் செய்துகொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷ

கோர்ட்டுகளில் சட்ட ஞானமுள்ள ஒருவரோ அல்லது ஒரு பிரபல பாரிஸ்டரோ நியாயாபதியாக இருப்பார்; அத்துடன் ஒரு விவசாயி யும், ஒரு பண்ணை எஜண்டும் இரு அங்கத்தினர்களாக இருப்பர்.

விவசாயிகளைமட்டும் நன்கு உழைக்கும்படி தூண்டிஞல்மட்டும் அரசாங்கத்தின் திட்டம் ஈடேறிவிடுமா? ஆகவே நிலச் சொந்தக்காரர் களுக்கும் அநேக கடமைகள் இருக்கின்றன. நிலச் சொந்தக்காரர்கள் பண்ணைகளுக்கான கட்டிடங்கள் நிர்மாணிப்பது, விவசாயத்திற்கான சாதனங்களை தருவித்துக்கொடுப்பதுபோன்ற பொறுப்புகளை ஒழுங் காக நிறைவேற்றவேண்டியிருக்கிறது. ஆகவே தற்போது கவுண்டி கமிட்டிகள் எஸ்டேட் விஷயங்களிலும் தலையிட்டுவருகின்றன. நிலச் சொந்தக்காரர்கள் தம் கடமைகளில் தவறிவருகிருரென்பது தெரிய வந்தால் பிரஸ்தாப கமிட்டி அவருக்கு அதை எடுத்துக்காட்டித் திருத் திக்கொள்ள என்ன செய்யவேண்டுமென்பதையும் தெளிவாக எடுத்து ரைக்கின்றது.

நிலச்சொந்தக்காரர்களுக்கு விடுக்கப்படும் "உத்தரவுகளும்" நியாயமானதாக இருக்கவேண்டும். தற்போதைய நிலைமைகளில் பெற முடியாத சாதனமொன்றை விவசாயிகளுக்கு சப்ளைசெய்யும்படி அவ ரைக் கேட்பது நியாயமல்ல. ஆனல் அவரால் செய்ய இயலும் என்றோ அல்லது பண்ணைகளின் திறமைக்கு அவசியமென்றோ கமிட்டி கருதி ஞல் அவ்வித அபிவிருத்தியை உடனடியாகச் செய்யும்படி கேட்கப்படு வார். இவ்விதம் அறிவித்த பின்னரும் நிலச்சொந்தக்காரர் அதைச் செய்துமுடிக்கத் தவறினல் அவரையும் கமிட்டி கண்காணிப்பில் வைக் கும். இறுதியான நடவடிக்கையாக அவருடைய நிலத்தைப் பறிமுதல் செய்வதற்கான அதிகாரமும் அரசாங்கம் பெற்றிருக்கிறது. சமீபத் தில் அமல்செய்யப்பட்டுள்ள விவசாயச் சட்டப்படி அவருடைய நிலம் நியாயமான விலைக்கு வாங்கப்படும்; அல்லது நன்கு நிர்வகிக்கக்கூடிய வேறொரு நபருக்கு விற்கப்படலாம்; அல்லது அரசாங்கப் பண்ணைகளை கவனிப்பதற்காகவுள்ள விவசாய கமிஷனிடம் ஒப்படைக்கப்படலாம். ஆகவே இவைகளிலிருந்து கவுண்டி கமிட்டிகளும், ஜில்லா கமிட்டி களும் பண்ணைகளின் நிர்வாகத்தின் இரு அம்சங்களையும் (விவசாயி, நிலச்சொந்தக்காரர்) கவனித்துவருகின்றன என்பது நன்கு விளங்கும்.

# முதியோர் இருவர்

M. A. துரை அரங்கனார், B. O. L., M. O. L.

(முன்னையை தொடர்ச்சி)

## 3

முதியோர் இருவரும் ஐந்து வாரங்கள் வரை நடந்து சென்றனர். வர்கள் அணிந்திருந்த மிதியடிகளும் தேய்ந்து போயின. நெல்லூரை டைந்ததும் அவர்கள் அவற்றை வீசி எறிந்துவிட்டுப் புது மிதியடிகளை ங்கி அணிந்து கொண்டனர். வீட்டை விட்டுப் புறப்பட்டது முதல் ணவிற்கும் தங்குமிடத்திற்கும் அவர்கள் தங்கள் கைப்பணத்தையே லவழித்து வந்தார்கள். ஆனால் ஏலூரை அடைந்ததும் அங்கே ருந்தவர்கள் எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் ட்டில் வந்து அவர்கள் விருந்தினராகத் தங்கவேண்டும் என்று அவர் ள் வேண்டி அழைத்தனர். உணவிற்கென்று அங்கே இருப்பவர் எப்போதும் காசு வாங்குவதே இல்லை. அவர்களுக்கு உணவு அளித்த தோடு நில்லாமல், பயணத்திற்குப் பயன்படுமாறும் அவர்களுடைய பைகளில் பழங்களும் பலகாரங்களும் அவர்கள் போட்டு நிரப்பி அனுப்பினர்.

இவ்வாறு ஐந்நூறு கல் தூரம் அவர்கள் பெருஞ் செலவில்லாமலே பயணம் செய்தனர். ஆனால் அவர்கள் கோதாவரியைத் தாண்டிப் பார்வதிபுரத்தை அடைந்ததும், அவர்களுக்கு உணவுக் கஷ்டம் ஏற்பட்டது. அங்கே பயிர் ஒன்றும் அப்போது விளையவில்லை. ஆயினும் அவர்களுக்குத் தங்குவதற்கு மாத்திரம் காசு இல்லாமல் அவ்வூரார் இடம் அளித்தனர்; காசில்லாமல் உணவுதர எவரும் முன்வரவில்லை. சில சமயங்களில் காசு கொடுத்தாலும் உணவு கிடைப்பதில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாது போனதால் அங்கே நல்ல விளைவு இல்லை. அந்த ஆண்டில் அடியோடு விளைவு இல்லாது போயிற்று. பணக்காரர்கள் எல்லோரும் தங்கள் வீடுகளிலிருந்த சாமான்களையெல்லாம் விற்று விற்று ஏழைகளாயினர்; பணமில்லாவிட்டாலும் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வந்தவர்கள் சிறிதளவுகூட உணவு கிடைக்காமல் திக்கற்றவராயினர்; ஏழைகளுள் பெரும்பான்மையோர் அந்த ஊரைவிட்டு அயல் காடுகளுக்குச் சென்றுவிட்டனர்; அப்படிச் செல்லாதவர்கள் எல்லோரும் பிச்சை எடுத்து அலைந்து பட்டினியால் மிகவும் தத்தளித்தனர். குளிர்காலம் வந்ததும் அவர்கள் தவிடும் தழைகளும் தின்று வாழவேண்டியவராயினர்.

ஓரிரவு அந்த முதியோர் இருவரும் அந்த ஊரில் தங்கினர். அதிக விலை கொடுத்து இரண்டு மூன்று நாளைக்கு வேண்டுமளவு ரொட்டி வாங்கிக்கொண்டு வெயிலுக்குப் பயந்து அதிகாலையிலேயே அவர்கள் பயணமாயினர்; எட்டுமைல் தூரம் நடந்து சென்றபிறகு, ஓர் ஓடை தென்பட்டது. அங்கே ரொட்டியைத் தண்ணீரில் தோய்த்துத் தோய்த்துத் தின்றுவிட்டுச் சிறிது நேரம் அவர்கள் களைப்பாறினர். அப்போது பூவனூர் தம்முடைய பொடிப் பட்டையை எடுத்தார். தேனனூர் அது கண்டு தம் முகத்தைச் சுளித்தார்.

"இந்தப் பீடைப் பழக்கத்தை நீ ஏன் விட்டுத் தொலைக்கலாகாது?"

இதுகேட்ட பூவனூர் தம் கையை விரித்து, "பொடி போடுவது கெட்ட பழக்கம்தான் என்று நன்றாகத் தெரிகின்றது. ஆனால் அதை என்னால் விடமுடியவில்லையே! என்னைவிட அது மிகவும் வலிமையுடையதாயிருக்கிறதே!" என்றார்.

உடனே அவர்கள் எழுந்து நடக்கத் தலைப்பட்டனர். ஏழெட்டு மைல்கள் கடந்த பிறகு அவர்கள் ஒரு பெரிய ஊரை யடைந்தனர்; ஆனால் அங்கே நிற்காமல் அதனுள் புகுந்து அதைக் கடந்து சென்றனர். அப்போது வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. பூவனூருக்குச் சிறிது நேரம் தங்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவருடைய நாவும் உலர்ந்து போயிற்று. தண்ணீர் குடிக்க வேண்டுமென்று அவர் கருதினார். ஆனால் தேனனூர் நிற்காமல் விரைவாக நடந்துகொண்டே இருந்தார். அவர் நடப்பதில் சமர்த்தர். பூவனூரால் அவரோடு தொடர்ந்து நடக்க முடியவில்லை.

"கொஞ்சம் தண்ணீர் குடித்தால் நன்றாக இருக்கும்" என்றார் பூவனூர்.

"உனக்கு வேண்டுமானால் தண்ணீர் குடித்துவிட்டு வா; எனக்குத் தேவையில்லை" என்றார் தேனனூர்.

பூவனூர் சற்றுத் தயங்கி, "நீ போய்க் கொண்டே இரு. நான் அதோ இருக்கிற குடிசைக்குச் சென்று தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன். ஒரு நொடிப்பொழுதில் உன்னை வந்து பிடித்துக் கொள்கிறேன்" என்றார்.

"சரி" என்று தேனனூர் சாலைவழியே தனியே நடந்து சென்றார். பூவனூர் குடிசைக்கு வந்தார்.

குடிசை மிகச் சிறியது. தரையும் சுவர்களும் மண்ணால் ஆனவை. சுவர்களெல்லாம் கீழே நீல நிறமும், மேலே வெள்ளை நிறமும் பூசப் பெற்றிருந்தன; ஆனால் எங்கே பார்த்தாலும் வெடிப்பும் உடைப்புமாய் இருந்தன. மண்பூசி அநேக ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். கூரையும் கூட ஒரு பக்கத்தில் அடியோடு பிரிந்து போயிருந்தது. குடிசைக்

குப் பின்புறமாகத்தான் வழியிருந்தது. பின்புறத்திலிருந்து தோட்டத்திற்குள் நுழைந்து குடிசையின் வாயிலைப் பூவணுர் அடைந்தார். அதன் பின்பக்கத்தில் சுவரிலிருந்து சரிந்து விழுந்திருந்த மண்மீது கண்திறந்த படியே ஒருவர் கிடந்தார். வெயில் அவர்மீது நன்ருகத்தான் வீசியது. இருந்தும் ஏனோ அவர் அங்கேயே செயலற்றுக் கிடந்தார். பூவணுர் அவரைப் பார்த்துக் குடிக்கச் சிறிது தண்ணீர் தரவேண்டும் என்று வேண்டினர். ஆனல் அந்த மனிதர் பதிலொன்றுங் கூறவில்லை.

'ஒன்று, நோயினல் களைப்புற்றிருக்க வேண்டும்: இல்லா விட்டால், நம்மீது வெறுப்புக் கொண்டிருக்க வேண்டும்' என்று பூவணுர் நினைத்தார்; எனவே, வாயிற்கதவை அணுகி, அதன் சங்கிலியை ஆட்டினர். உள்ளேயிருந்து ஒரு குழந்தை அழும் ஒலிகேட்டதே தவிர, யாருமே பதிலளிக்கவில்லை.

"யார் உள்ளே?...யாரம்மா உள்ளே?...யாரய்யா உள்ளே?" என்று அவர் பலமுறைக் கதவைத் தட்டித் தட்டிக் கூப்பிட்டார்.

பதி லொன்றுமே யில்லை.

"ஐயோ, தர்மமே இல்லையா? தெய்வமே!" என்று அவர் மறுபடியும் தம்முடைய கைத்தடியால் தட்டினர். அப்போதும் பதிலொன்றும் வரவில்லை.

பூவணுர் திரும்பிப்போக நினைத்தார். அப்போது கதவின் அப்புறத்திலிருந்து யாரோ குரட்டை விடும் ஒலி கேட்டது.

"இவர்களுக்கு ஏதோ கெட்டகாலம் ஏற்பட்டிருக்க வேண்டும்! உள்ளே சென்று பார்ப்போம்!" என்று சொல்லிக் கொண்டே பூவணுர் குடிசைக்குள் நுழைந்தார்.

## 4

பூவணுர் கதவின் சங்கிலியை அவிழ்த்துக் கதவை அமுக்கினர். கதவின் உள்ளே தாழிட வில்லை. எனவே அவர் அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்ருர். படுக்கையறை திறந்தபடியே கிடந்தது. அங்கே ஒரு விசிப்பலகையின்மேல் கிழவி ஒருத்தி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கட்டியிருந்த ஆடை நான்கு முழம் கூட இராது. எதிரில் இருந்த மேஜையின் மேல் தலையை வைத்துக் கொண்டு அவள் கவிழ்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் மெலிந்து, வெளுத்துப்போய், வயிறுமுன் தள்ளிய ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். அவன் ஓவென்று அழுது கொண்டும், அவள் துணியைப் பிடித்து இழுத்துக் கொண்டும் ஏதோ தரும்படி அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தான். அப்போது தான் பூவணுர் நுழைந்தார். உள்ளே துர்நாற்றம் வீசிற்று. பூவணுர் சுற்றுமுற்றும் பார்த்தார். அடுப்பின் பக்கத்தில் ஒருத்தி பிணம்போல்

படுத்துக்கிடந்தாள். அவளுடைய தொண்டை, நீர் வற்றிப்போய் மூச்சு விடும் போது அடிக்கடி அடைபட்டது. ஒரு காலை மடிப்பதும் ஒரு காலை நீட்டுவதும், ஒருபோது ஒரு பக்கம் புரளுவதும், மற்றொரு போது மற்றொரு பக்கம் புரள்வதுமாக அவள் கிடந்தாள். அவளிடமிருந்துதான் அந்த நாற்றம் வீசியது. அவளுக்குத் துணை புரிவர் யாருமில்லை. அவள் தானாகவே ஒன்றும் செய்ய மாட்டாதவளாகக் கிடந்தாள். பூவனூர் உள்ளே பார்த்துக் கொண்டே இருந்தபோது விசிப் பலகையின்மேல் உட்கார்ந்திருந்த கிழவி தலைதூக்கிப் பார்த்தாள். பூவனூரைக் கண்டதும், "யாரப்பா நீ? எங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? எங்களிடத்தில் ஒன்றுமில்லை! போய்வா" என்று வருத்தத்தோடும் வெறுப்போடும் அந்தக் கிழவி சொன்னாள்.

அவள் வங்காளி மொழியில் பேசினாள் என்றாலும் பூவனூர் அவள் சொல்லியதை உணர்ந்து கொண்டார்.

"சிறிது குடிதண்ணீர் வேண்டியே நான் இங்கே வந்தேன்; உங்களுக்குச் சிறிதும் கருணையில்லையே!" என்றார் பூவனூர்.

"ஐயோ! இங்கே யாருமில்லையே! ஒருவருமில்லையே! கொண்டு வருவதற்கும் ஒரு பாத்திரமில்லை! எங்கேயாவது போயேன்."

"அப்படியா? யாருமே உங்களுக்கு ஆதரவு இல்லையா? அதனால் தான் அதோ கிடக்கும் அந்த நங்கை அப்படிக் கிடக்கிறாளா?" என்று பூவனூர் கேட்டார்.

"இல்லை! ஒருவருமே எங்களுக்குத் துணையில்லை! அதோ வெளியே என் மகன் உயிர் துறந்து கொண்டிருக்கின்றான்! இதோ இங்கே நாங்கள் உயிர் துறந்து கொண்டிருக்கின்றோம்!"

அந்தச் சிறுபையன் புதிய மனிதரைப் பார்த்ததும் அழுவதை நிறுத்தினான். ஆனால் கிழவி பேசத் தொடங்கியதும் அவளுடைய ஆடையைப்பற்றிக் கொண்டு, "ரொட்டி, பாட்டி! ரொட்டி" என்று கத்திக் கேட்டான்.

பூவனூர் கிழவியிடம் ஏதோ கேட்க வேண்டும் என்று வாய் திறந்தார். அப்போது வெளியே இருந்த மகன் தத்தித் தள்ளாடிக் கொண்டே குடிசைக்குள் நுழைந்தான்; சுவரைப் பிடித்துக்கொண்டே குடிசைக்குள் நுழைந்தவன் படுக்கையறைக்குள் நுழைய முற்பட்ட போது அதன் வாயிற்படி தடுத்தபடியால் அதன் முற்பக்கத்திலேயே குப்புற விழுந்தான். மறுபடியும் எழுந்து விசிப்பலகையை அடைய வேண்டும் என்று விரும்பாமல் அங்கே கிடந்தபடியே வாய் குழறிப் பேசத் தலைப்பட்டான். ஒரு சொல் கூறுவான்; இதற்குள் பெருமூச்சு விடுவான்; மறுபடியும் ஒரு சொல் கூறுவான்; மிக்க வருத்தத்தோடு மூச்சை உள்ளே இழுப்பான்.

' எங்களை.........எல்லாம்.........நோய்.........பிடித்து.........வாட்டு கிறது......பஞ்சம்!.......அவன்.......பசியால்.......இறந்துகொண்டு....... இருக்கிறான்.

இவ்வாறு கூறிக்கொண்டே பையன் இருந்த இடத்தை நோக்கிக் கொண்டே அவன் அழத் தொடங்கினான்.

பூவனார் தம் முதுகிலிருந்த பையைத் தளர்த்திக் கீழே வைத்தார்; அதைத் தூக்கி விசிப்பலகைமீது வைத்து அதை அவிழ்த்தார்; ஒரு முழு ரொட்டி எடுத்தார். கத்திகொண்டு ஒரு துண்டு அறுத்து அதை அந்த மனிதனிடம் கொடுத்தார். அதை அவன் வாங்கிக் கொள்ளாமல் பையனையும், பெண்ணையும் சுட்டிக் காட்டினான். அவ்வாறு காட்டியது அவர்களுக்குக் கொடுங்கள் என்று கூறுவது போன்று இருந்தது.

பூவனார் அதைப் பையனிடம் நீட்டினார். ரொட்டி மணம் வந்ததோ இல்லையோ உடனே தன் கைகளை நீட்டி அதை வாங்கி, இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மூக்கும் இருந்த இடம் தெரியாமல் அழுந்தி மறைந்து போகுமாறு வாய்வைத்து அதைக் கடித்தான். அது கண்டதும் அவன்பின் நின்ற நங்கை ரொட்டியை உற்றுப்பார்த்தாள். பூவனார் அவளுக்கும் ஒரு துண்டு கொடுத்தார். பின்பு மற்றொரு துண்டு அறுத்து அந்தக் கிழவிக்கும் கொடுத்தார். அவளும் அதைத் தின்ன ஆரம்பித்தாள்.

" இவர்களுடைய வாயெல்லாம் உலர்ந்துபோயிருக்கிறது. சிறிது தண்ணீர் இருந்தால் நன்றாயிருக்கும்! " என்றார் பூவனார்.

" இன்றைக்கோ, நேற்றோ, சரியாக நினைவில்லை! தண்ணீர் கொண்டுவர முயன்றேன். தொட்டியை எடுத்துக்கொண்டு வெளியே போனேன். ஆனால், மயக்கமாக விழுந்துவிட்டேன்; மேலே போக முடியவில்லை. யாரும் கொண்டு போகாமலிருந்தால் தொட்டி அங்கேயே கிடக்கும் " என்றாள் கிழவி.

" கிணறு எங்கேயிருக்கிறது? " என்று பூவனார் கேட்டார். கிழவி, கிணறு இருக்குமிடத்தைக் கூறினாள். பூவனார் வெளியே சென்று தொட்டியைத்தேடி எடுத்துக்கொண்டு கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் கொண்டுவந்து அவர்களுக்கெல்லாம் குடிக்கக் கொடுத்தார். கிழவியும் அந்தச் சிறுவனும் சிறுமியும் தண்ணீரோடு மேலும் சிறிது ரொட்டி தின்றார்கள். ஆனால் அந்த மனிதன் மட்டும் சிறிதுகூட ரொட்டி தின்னவேயில்லை.

" என்னால் ரொட்டி தின்ன [illegible] " என்றார் அவர்.

அதுவரையில் அடுப்ப[illegible]ந்த நங்கை பசி மிகுதியால் ஏற்பட்ட காதலை[illegible] மூச்சு, [illegible] இல்லாமல் இப்படியும் அப்படியும் புரண்டுகொ[illegible]ருந்தாள். உட[illegible] பூவனார் அவ்வூரி

விருந்த கடைக்குப்போய்க் கொஞ்சம் கோதுமை மாவும், உப்பும், எண்ணெயும் வாங்கி வந்தார். அடுப்பிற்கு விறகு வேண்டியிருந்தது. கோடரியைத் தேடி எடுத்துப் பக்கத்தில் உலர்ந்துகிடந்த ஒரு மரத்தை அவர் பிளந்தார் ; அடுப்பு மூட்டினர். சிறுமியும் அவருடன் சமையலுக்கு உதவி செய்தாள். விரைவில் சமையல் முடிந்தது. பட்டினியால் வாடிக்கிடந்த அவர்களெல்லோருக்கும் ஒருவேளைக்கு வேண்டுமளவு பூவனர் உணவு தயார் செய்தார்.

## 5

கிழவனர் சிறிதே உண்டார். கிழவியும் சிறிதுதான் சாப்பிட்டாள். இளநங்கையும் இளஞ் சிறுவனும் நிரம்ப வயிறார உண்டு, உடனே படுத்து ஆழ்ந்த தூக்கத்தில் அழுந்தினர்.

கிழவனும் கிழவியும் தங்களுக்கு அந்த நிலை ஏற்பட்டதைச் சொல்லத் தொடங்கினர்.

" இயற்கையாகவே நாங்கள் ஏழைகள். அதனோடு விளைவு ஒன்றும் இல்லாமல் போனதால் நாங்கள் அரும் பாடுபட்டுத் தேடி வைத்திருந்த உணவுப் பொருள்கள் சென்றமாதமே அடியோடு ஆய்விட்டன. மழைக்காலம் தொடங்கியபோது வீட்டில் உணவிற்காக ஒன்றுமே இல்லை. எனவே, மானமிழந்து, அக்கம்பக்கத்தாரிடமும் மற்றவரிடமும் சென்று பிச்சையெடுக்கத் தலைப்பட்டோம். தொடக்கத்தில் அவர்கள் பிச்சைபோட்டு,வந்தார்கள். ஆனல் நாளடைவில் அவர்கள் எங்கள் மீது சிறி விழுந்தார்கள். சிலருக்கு உண்மையில் எங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஆனல் தங்களுக்கே இல்லாது போனதால் அவர்களால் ஒன்றும் உதவி செய்யமுடியாது போயிற்று. கடைசியாகப் பிச்சையென்று எவரையும் கேட்க மிகவும் நாணம் அடைந்தோம். பலரிடம் கடன் பட்டோம். பணம், கோதுமை மா, ரொட்டி இப்படிப் பலப்பல பொருள்கள் கடன் வாங்கிவிட்டோம்."

" ஏதாவது வேலை செய்து கூலி பெறலாம் என்று முயன்றேன், ஒருவேலையும் கிடைக்கவில்லை! தங்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி மக்கள் யாவரும் வேலைதேடி அலையலானர்கள். ஒருநாளைக்கு ஒரு சிறுவேலை கிடைக்கும். அடுத்து இரண்டு மூன்று நாட்கள் ஒரு வேலையும் இராது. கிழவியும் என் மகளும் அயலூர்க்கும் சென்று பிச்சை யெடுத்துவந்தனர். ஆனல் கிடைத்த பிச்சையோ மிக மிகக் கொஞ்சமே. ரொட்டி கிடைப்பதே அரிதாயிற்று. எப்படியோ ஒருவாறு உணவு பெற்று வாழ்க்கை நடத்தினேம். அடுத்த அறுவடைக்காலம் வரையில் இவ்வாறு காலம் கழிக்கலாம் என்று எண்ணினேம். ஆனல் சென்றமாதம் முதற்கொண்டே யாவரும் ஓர் இம்மியும் கொடுக்க மறுத்துவிட்டனர். போதாக் குறைக்கு எங்களுக்கெல்லாம் ஒன்று மாறி ஒன்றாக நோய் உண்டாயிற்று. எங்கள் நிலை மிக மிக மோச

மாயிற்று. ஒரு நாளைக்குச் சிறிது உணவு கிடைக்கும். அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு ஒன்றுமே கிடைக்காது, புல்லையும் தழையையும் தின்னத் தலைப்பட்டோம். புல்லுணவோ வேறு என்னவோ தெரிய வில்லை, என் மனைவியை நோயாளியாக்கியது. அவளால் நடக்கக்கூட முடியாது போயிற்று. என்னால் எழுந்திருக்கக்கூட முடியாதபடி தளர்ச்சியும் ஏற்பட்டது. நோயிலிருந்து விடுதலை பெற எங்களுக்கு ஒருவழியும் ஏற்படவில்லை."

"நான்மட்டும் பல்லைக் கடித்துக்கொண்டு கொஞ்சகாலம் பாடு பட்டுவந்தேன். இறுதியாய்ப் பசிமிகுதியால் மிகவும் மெலிந்துபோனேன். என் மகனும் மிகவும் மெலிந்து திகைப்புற்றான். 'அண்டை வீட்டுக் காரர்களிடம் போய் ஒரு கவளம் உணவு கேட்டு உண்டுவா' என்று என் மகளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். என் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ஒரு மூலையில் அவள் சுருண்டு கொண் டாள். முந்தாநாள், என் தங்கை தன் குழந்தைகளோடும் கணவ னோடும் அயலூரிலிருந்து வந்தாள். நாங்கள் பசியாலும் நோயாலும் வருந்துவதைப் பார்த்ததும் அவள் ஒன்றுமே சொல்லாமல் உடனே போய் விட்டாள். பாவம்! அவள் குழந்தைகளும் அன்று பட்டினி கிடந்தன! இப்படியெல்லாம் நாங்கள் ஏன் மானமிழந்து உயிர் வாழ வேண்டும்? செத்துப் போனாலும் நலமாகும்! ஆனால் சாவு வரவில் லையே!" என்று சொல்லிக் கிழவனார் பெரு மூச்சு விட்டார்.

அவர்கள் வரலாறு கேட்ட பூவனார், தம் நண்பரைச் சென்று அடையவேண்டும் என்ற எண்ணத்தை அறவே விட்டுவிட்டு, அன்றைய இரவு முழுதும் அவர்களோடே தங்கிவிட்டார். மறுநாள் காலையில் எழுந்திருந்து, அதைத் தம் வீடு என்றே நினைத்துக்கொண்டு, வீட்டு வேலைகளையெல்லாம் செய்யத் தொடங்கினார்; கிழவியோடு சேர்ந்து ரொட்டி தட்டிவைத்து விட்டு அடுப்பு மூட்டினார்; பிறகு சிறுமியை அழைத்துக் கொண்டு மிகவும் இன்றியமையாத பொருள்களை இரவ லாக வாங்கிவர அண்டை வீடுகளுக்குச் சென்றார். ஏன்? அவர்கள் வீட்டில் சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் கூடவா இல்லை! பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? சமையல் பாத்திரங்கள், துணி மணிகள் எல்லாவற்றையும், வயிறு வளர்ப்பதற்காக அவர்கள் ஒவ்வொன் றாக விற்றுத் தொலைத்து விட்டார்கள். எனவே, ஒன்றுமே அவர்கள் வீட்டில் இல்லை. அண்டை வீட்டார்களிடம் ஒன்றுமே இரவலாகக் கிடைக்கவில்லை. என்ன செய்வது? தம்மிடமிருந்த பணத்தில் கொஞ்சம் செலவு செய்து சிலவற்றை அவர் வாங்கினார்: சிலவற்றைத் தம் கையினா லேயே ஒருவாறு செய்துகொண்டார். ஒருநாள் கழிந்தது இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றும் நாளும் கழிந்தது. சிறுவன் சிறிது உடல் நலம் பெற்றான். பூவனார் உட்கார்ந்திருந்த போதெல்லாம் அவன் மெதுவாக நகர்ந்து சென்று அவரைக் கட்டியணைத்துக் கொள்ள லானான். சிறுமியும் தெளிவுபெற்று வேலை செய்யும் ஆற்றல் அடைந்

# அந்தத் தொடக்க நாளில்

ம. இராதகிருஷ்ணப் பிள்ளை, M. A., B. L, (முன்னைய மேயர்)

(முன் இதழ் தொடர்ச்சி)

## அங்கம்—2

சில நூற்றுண்டுகட்குப் பின் காலை. மெசபடோமியா பாலை வனத்தில் ஓர் பசுந்திடல் (ooses) அங்கே ஒரு தோட்டத்தின் கோடியில் ஒரு சிறு மர வீடு. அந்தத் தோட்டத்தின் மத்தியில் ஆதாம் சம்மட்டியின் உதவியால் ஓர் குழி தோண்டிக் கொண்டிருக்கிறுன். கதவுக்குப் பக்கத்தில் மர நிழலில் ஈவ் ஒரு பலகைமீது உட்கார்ந்து சணல் நூற்கிருள். அவளுடைய சர்க்கா ஒரு பெரிய வட்டவடிவமான மரத் துண்டு. தோட்டத்துக்கு எதிர்ப்புரத்தில் ஒரு முட் புதர் இருக்கிறது. அதன் வழி படலால் மூடப்பட்டிருக்கிறது.

இருவரும் சணலாலும், இலைகளாலும் சொற்ப உடை அணிந்து உடலை மூடிக் கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் இளமையும் கம்பீரமும் எங்கேயோ மறைந்து விட்டது. ஆதாமுக்கு தாடி வளர்ந்து தலை சடையிட்டிருந்தது. ஆனுல் அவர்களுக்கு வலிவு இருந்தது. இருவரும் நல்ல வயதுடையவர்களாகவே காணப்பட்டார்கள். ஒரு விவசாயி போல் கவலையுற்றவனுக ஆதாம் காணப்பட்டான். ஈவ் மகிழ்ச்சியுடனேயே உடகார்ந்து நூற்றுக் கொண்டே எண்ண மிடுகிருள்.

ஒரு மனிதன் குரல் அம்மா!

ஈவ் : (தோட்டத்தில் முட்புதர் பக்கம் உள்ள வழியைப் பார்க்கிருள்.) கெயின் இதோ வருகிறுன்.

ஆதாம் : (மௌனமாக ஊறுபிக்கொண்டு தலை நிமிர்த்தாமல் குழி வெட்டுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறுன்.)

கெயின் படலைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு

---

தாள். "தாதா, தாதா" என்று அழைத்துக் கொண்டு பூவனுருடன் அவள் வீட்டு வேலைகளைச் செய்யத் தலைப்பட்டாள்.

கிழவி நல்ல உடல்வலி பெற்று அண்டை வீடுகளுக்குப் போய் வரத் தலைப்பட்டாள். அவள் மகனும் சிறிது குணமடைந்து சுவரைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கவும் உட்காரவும் நகரவும் தலைப்பட்டான். அவன் மனைவிமட்டும் எழுந்திருக்கவேயில்லை. இருந்த போதிலும், மூன்றும் நாள், சிறிது தன்னுணர்வு பெற்று 'பசிக்கிறது' என்றுள்.

"வழியில், இவ்வளவு காலம் வீணுக்குவேன் என்று நான் எண்ணவேயில்லையே! இருந்தாலும் இருக்கட்டும். நான் இனிமேல் புறப்பட்டுப் போகவேணடும்" என்று பூவனுர் எண்ணினுர். (தொடரும்)

தோட்டத்திற்குள் பிரவேசிக்கிறான். ஒரு பெரிய ஈட்டியும், பித்தளை உரையிட்ட தோல் கேடயமும் வைத்திருக்கிறான். புலித் தலையோடு காளையின் கொம்புகளை உடைய கிரிடம் அணிந்திருக்கிறான். சிங்கத் தோலை ஆடையாக அணிந்திருக்கிறான். அவன் செருப்பில் பித்தளை அலங்காரங்கள் உள்ளன. அவன் தாடி நன்றாக எண்ணை பூட்டப் பட்டிருக்கிறது. பெற்றோர்கள் அவனைக் கண்டிப்பதும், ஆதரவு காட்டுவதும் கிடையாது. பெற்றோர்க்கு அடங்காதவன் போல் காணப் படுகிறான்.

கெயின்: (ஆதாமை நோக்கி) இன்னுமா தோண்டுகிறாய்? எப்பொழுதும் தோண்டுவதுதான். வேலையில் முன்னேற்றமே இல்லை. நீ கற்றுக் கொடுத்த இந்த வேலையை நான் செய்து கொண்டிருந்தால் என்ன பயனடைந்திருப்பேன்.

ஆதாம்: ஈட்டியோடும் கேடயத்தோடும் நீ என்ன? உன்னுடைய தம்பியின் ரத்தம் பூமியிலிருந்து உன்னை எதிர்க்கிறது.

கெயின்: நான் முதல் கொலைகாரன். நீ முதல் மனிதன். யார் வேண்டுமானாலும் முதல் மனிதனாக இருக்கலாம். அது முதல் கத்தரிக் காயாயிருப்பது போல மிக எளியது. முதல் கொலைக் காரனாக யிருக்க ஒரு மனிதன் வீரனாக இருக்க வேண்டும்.

ஆதாம்: சென்று விடு, எங்களைச் சாந்தியடைய விடு. நாமிருவரும் பிரிந்து வாழ உலகம் பெரியது.

ஈவ்: நீ ஏன் அவனைத் துரத்தியடிக்கிறாய். அவன் என்னுடையவன். என் உடலிலிருந்து நான் அவனை உண்டாக்கினேன், என்னுடைய உற்பத்தியை நான் சில சமயங்களில் பார்க்க ஆசைப் படுவேன்.

ஆதாம்: ஏபிலையும் நீதான் உண்டாக்கினாய அவனை இவன் கொன்றான். அப்பால் இவன் முகத்தில் நீ விழிக்கலாமா?

கெயின்: ஏபிலைக் கொன்றது யார் குற்றம்? கொலையைக் கண்டு பிடித்தது யார்? நானா? அவனே அதைக் கண்டு பிடித்தவன். நீ சொன்னதை நான் செய்து வந்தேன். நான் தோண்டினேன், தோண்டினேன். நான் முட்களையும் புதர்களையும் அறவே களைந்தெடுத்தேன். பூமியில் உற்பத்தியானவற்றை உண்டேன். என் உழைப் பாலேயே நான் உன்னைப்போல் வாழ்ந்தேன். நான் ஒரு மூடன். ஏபில் ஒரு ஆராய்ச்சிக்காரன், விஷயங்கள் தெரிந்தவன், உணர்ச்சியுடையவன்; உண்மையான முன்னேற்றக்காரன். ரத்தம் என்ன என்பதைக் கண்டு பிடித்தான், கொலையைக் கண்டு பிடித்தான். சூரியனின் வெப்பத்தை கீழே விழும் பனித்துளியில் கொணர்ந்தான். நெருப்பை அணையாமல் வைக்க நெருப்புக் குழியைக் கண்டு பிடித்தான். தான் கொன்ற மிருகங்களை நெருப்பின் உதவியால் இறைச்சியாக்கினான். அவன் அவ்விறைச்சியைத்தின்று உயிர்வாழ்ந்தான். அதன் பயனாக அவன் சுகமாக விளையாடினான். அவனிடம் நீ ஒன்றும் கற்றுப் பயனடையவில்லை. நீ நன்றாகக்குழிதோண்டுவதில் உழைத்து என்னையும் அதையே செய்யும்படி

தாண்டினாய். அவனுடைய சுக வாழ்வையும் சுயேச்சையையும் கண்டு நான் பொறாமை கொண்டேன். அவன் செய்வதைப் போல் செய்யாததற்காக நான் என்னையே வெறுத்தேன். களிப்பினால் தனக்குக் கிடைத்த உணவை அவன் தோட்டத்திலிருந்து தனக்கு இவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்த அக்குரலுக்குக் கொடுத்துத் தானும் உண்டான். உணவைச் சமைத்த நெருப்பின் குரலே தனக்கு எல்லாவற்றையும் கூறியது என்றான். சமைத்த குரலே சாப்பிடவும் செய்தது. அதுமுற்றிலும் உண்மை. நெருப்புக் குழியில் இருந்த உணவை அது விழுங்குவதை நான் பார்த்தேன். நானும் ஒரு நெருப்புக்குண்டம் உண்டாக்கி என்னுடைய உணவாகிய தானியங்களையும் பழங்களையும் கொடுத்தேன். ஒன்றும்மேநடைபெற வில்லை. பயனியல்லை; அவன் என் செய்கையைக் கண்டு நகைத்தான். அப்பொழுது தான் எனக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று. அவன் உயிர்களைக் கொன்றது போல் நான் ஏன் அவனைக் கொல்லக் கூடாது? நான் அடித்தேன். அவன் இறந்து விட்டான் அவற்றைப் போல். பிறகு நான் குழி தோண்டுவதை நிறுத்தி அவனைப் போல் வேட்டையாடி நெருப்பின் உதவியால் வாழ்ந்தேன். நான் உன்னை விடச் சிறந்தவன் அல்லவா? பலசாலி அல்லவா? சுயேச்சையுடையவன் அல்லவா?

ஆதாம் : நீ உண்மையில் அவனை விட வலிமை பொருந்தியவன் அல்ல. காற்றடித்தால் உன்னால் சகிக்க முடிய வில்லை. உன்னால் மிருகங்கள் நம்மைக் கண்டு அலறியோடு கின்றன. பாம்போ நம்மிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விஷத்தைக் கண்டு பிடித்திருக்கிறது. நானே உன்னைக் கண்டு அஞ்சுகிறேன். ஈட்டியோடு உன் தாயை நீ அணுகினால் உன்னை நான் இந்த சம்மட்டியாலடித்தே கொன்று விடுவேன்.

ஈவ் : அவன் என்னைத் தாக்க மாட்டான். என்னை நேசிக்கிறான்.

ஆதாம் : அவன் சகோதரனையும் நேசித்தான். ஆனால் அவனைக் கொன்றான்.

கெயின் : பெண்களைக் கொல்ல நான் விரும்ப வில்லை. அதிலும் என்னுடைய தாயை நான் கொல்லுவேனா? நீ சம்மட்டியால் என்னை அடிக்க வருவதற்கு முன்பே நான் உன்னை என் ஈட்டியால் கொன்று போட்டு விடுவேன். ஆனால் அவள் பொருட்டு அதனைச் செய்ய மாட்டேன். நான் காட்டுப் பன்றியோடும் சிங்கத்தோடும் உயிருக்காபத்தான சண்டையில் ஈடுபட்டிருக்கிறேன். மனிதனோடும் ஈட்டியோடு ஈட்டி, கேடயத்தோடு கேடயம் மோதும்படி போர் செய்திருக்கிறேன். அது மிகப் பயங்கரமானது. ஆனால் அதைப் போன்று களிப்பளிப்பது வேறொன்று மெனக்கில்லை. அதை நான் போர் என்கிறேன். யுத்தம் செய்யாதவன் உண்மையில் உயிர் வாழ்ந்தவன் அல்ல. அதற்காகவே என் தாயிடம் நான் வந்திருக்கிறேன்.

ஆதாம் : நீங்கள் இருவரும் இப்பொழுது என்ன செய்யப்

போகிறீர்கள். அவள் உண்டாக்குபவள்; நீ அழிப்பவன்.

கெயின் : அவள் உண்டாக்காவிட்டால் நான் எப்படி அழிக்க முடியும். அவள் அதிகமாக மனிதர்களை உண்டாக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஆண்களையும் பெண்களையும் உண்டாக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் முறையே இன்னும்பல ஆண்களையும் பெண்களையும் உண்டாக்குவார்கள். இப்படிப் பல ஆயிரம் ஆண்களும் பெண்களும் உண்டாக்கப் படுவார்கள். நான் அவர்களை இரண்டு கட்சி களாகப் பிரிப்பேன், நான் ஒரு கட்சிக்குத் தலைவனாக இருப்பேன். மிகுந்த வீரமுடைய ஒருவன் மற்றொரு கட்சிக்குத் தலைமை வகிப்பான். இரண்டு கட்சியினரும் சண்டையிட்டு ஒருவரையொருவர் கொல்லும் முயற்சியில் ஈடு படுவோம். அதை நினைத்துப்பார், இரத்த வெள்ளம் அதிகமாகப் பெருகும். போரும் கொலையும் நிறைந்திருக்கும். வெற்றிக் குரல் ஒருபுறம்! ஆத்திரத்தில் அலறுதல் ஒரு புறம்,! நம்பிக்கையிழந்து பழிப்பது ஒரு புறம்! சித்திர வதையால் வீரிடுதல் ஒரு புறம்! இதுவல்லவா வாழ்க்கை. இதைக் கண்டும் செய்தும் அறியாதவன் பேதை யல்லவா?

ஈவ் : நீ மனிதர்களைக் கொல்வதற்கு அவர்களை உண்டாக்கும் கருவி நான்!

ஆதாம் : அல்லது உன்னைக் கொல்வதற்கு, மூடா.

கெயின் : தாயே, மனிதர்களை உண்டாக்குவது உன் உரிமை, உன் துணிவு, உன் மகிமை, உன் வேதனை, உன் வெற்றி. என் தகப்பன் அதற்கு உனக்கு உதவுபவன். அவர் உனக்கு உழைப்பவர் கழுதையைப் போல். ஆனால் அந்த வாழ்க்கையை நான் ஒருக் காலும் எந்தப் பெண்ணின் தூண்டுதலாலும் மேற் கொள்ளேன். என் நரம்பில் உறுதியிருக்கும் வரை நான் யுத்தம் செய்வேன். காட்டுப் பன்றியை ஓடிக் கொல்வேன். அதைச் சமைக்க அப் பெண்ணிடம் கொடுப்பேன். அவள் செய்யும் வேலைக்குக் கூலியாக அவளுக்கு இதில் சிறிது கொடுப்பேன். அவளுக்கு வேறு உணவு கிடையாது. அவள் அப்பொழுது என் அடிமையாவாள். என்னைக் கொல்பவன் அவளைச் சன்மானமாகப் பெறுவான். மனிதன் பெண்ணின் தலைவன், அவள் கைக் குழந்தை யல்ல.

[ஆதாம் தன் சம்மட்டியைக் கீழே வீசி எறிந்துவிட்டு ஈவை ஒரு பாவை பார்க்கிறான்.]

ஈவ் : நீ அதில் மயங்கிவிட்டாயா, ஆதாம். நம்மிருவருக்கு முன்ன நிலைந்த அன்பைவிட அவன் கூறியது சிறந்ததா?

கெயின் : காதலைப்பற்றி அவருக்கென்ன தெரியும். யுத்தம் செய்து அச்சத்தையும் சாவையும் நேருக்கு நேர் கண்டிருந்தால் அவருக்குப் பெண்ணின் கரங்களில் ஆதரவாகக் களைத்துப் படுத்திருக்கத் தெரிந்திருக்கும். நீயே உண்டாக்கிய என் மனைவியாகிய லூவாவை வேண்டுமானால் கேள்? நான் தந்தையைப் போல் குழி வெட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தால் அவள் என்னை விரும்பி யிருப்பாளா என்று கேட்டுப் பார்?

ஈவ் : (கோபத்தோடு) பஞ்சு சுற்றியிருக்கும் கதிரைக் கீழே

ஈறிகிருன்) என்ன? பெண்களின் கீழானவளும், மனைவியில் கீழான வளுமான அந்த லூவாவைப் பற்றியா நீ பிரமாதமாகப் பெருமையடித்துக் கொள்ளு கிருய்! நீ அவள் தலைவன். ஆவா மின் எருதைப் போல நீ அவள் அடிமை. காட்டுப் பன்றியைக் கொன்று அதன் இறைச்சியை அவள் செய்த வேலைக்குக் கூலி யாக அளிக்கிருயா? நன்ருய் இருக்கிறது! எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிருயா? கீரிப் பிள்ளைகளைப் பிடித்து அவள் தோள்மேல் போடுவதற்கு நீ எவ் வளவு கஷ்டப்படுகிருய்! ஆமாம்! மெல்லிய பறவைகளை அவளுக்கு உணவாக அளிக்க எவ்வளவு வருந்திப் பிடிக்கிருய்! ஆனல் புலியைக் கொல்வதற்கு ஆபத் தைக்கவனியாமல் துணிச்சலாகச் சொல்கிருய் என்பது மாத்திரம் உண்மை.

நீ ஆபத்தொன்றும் பாராமல் துணிந்து கொன்ற புலியின் தோலை யார் அணிகிருர்கள். அவள் படுத்துக் கொள்ளும் ஜமக்காளமாகத் தோலை யெடுத் துக்கொண்டு இறைச்சியை உனக்கு எறிந்து விடுகிருள். நீ ஏன் போர் புரிகிருய் என்ருல் அவள் விருப்புக்கும் மதிப்புக் குப் பாத்திரமாக. அவள் ஏன் உன்னைச் சண்டை செய்யத் தூண்டுகிருள் என்ருல், ஆபர ணங்களும் பொருள்களும் எதிரி யிடமிருந்து கொணர்ந்து அவளி டம் சேர்ப்பாய் என்று. உனக்கு அஞ்சியவர்கள் அவளுக்கு வணங்கி வேண்டியதைக் கொடுக் கிருர்கள். ஆதாமை நான் ஓர் கருவியாக எண்ணுகிறேன் என்று கூறினய். நூற்றுக் கொண்டு, வீட்டை கவனித்துப் பிள்ளைகளைப் பெற்று அவர் களைக் காப்பாற்றும், நான் வேண்டும் போது மனிதர்களை திருப்தி செய்து பின்னல் வேண் டாதபோது அவர்களைக் கொல் லும் ஓர் மிருகம் அல்ல. மிருக ஆடையைத் தரித்திருக்கும் அடி மையே, நான் பெற்றெடுத்த போது நீ ஓர் ஆண் குழந்தை. லூவா ஓர் பெண் குழந்தை. நீங்கள் என்ன செய்து கொண் டீர்கள் இப்பொழுது..

கெயின்: (கேடயத்தை உறை யில்போட்டு விட்டு) மனிதனி லும் உயர்ந்த ஒன்றிருக்கிறது. அது வீரமனிதன், மேலான மனிதன்.

ஈவ்: மேலான மனிதன்! அந்த மேலான மனிதன் நீயல்ல. நீ மனித—விரோதி. குழிமுய லுக்கு வெள்ளைக்கீரி எப்படி யோ, அதுபோல் நீ மனித சமூகத் துக்கு, அவள் உனக்கு அட்டை. நீ வெள்ளைக்கீரி. நீ உன் தந் தையை வெறுக்கிருய். அவர் இறந்தால் உலகம் எவ்வளவு வளர்ச்சியடைந்தது என்று அவர் பின்னல் வருபவர்கள் அறிவார் கள். நீ இறந்தால் உனக்காக வருத்தப்படுபவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். நீ பிறவா திருந்தாலே நல்லதென்பார்கள். லூவாவைப் பற்றி நினைக்கும் போது அவர்கள் துப்புவார்கள்.

கெயின்: கூட வாழ்வதற்கு அவள் உன்னைவிடப்பிடித்தமான பெண்தான். நீ ஆதாமைக் கண்டிப்பது போல் லூவா என் னைக் கண்டித்தால் அவளை நான் நன்ருகப் புடைத் திருப்பேன். புடைத்திருக்கிறேன் கூட. நீ என்னை அடிமை என்கிருய்.

ஈவ் : ஆம். ஏனென்றால் அவள் வேறொரு ஆடவனைப் பார்த்தாள் என்பதற்காக. பிறகு நீ அவள் காலில் விழுந்து மன்றாடி மன்னிப்புக்கேட்டாய் பிறகு முன்னையிருந்ததைவிட பன்மடங்கு அவளுக்கு அடிமையாகி விட்டாய். அவளுக்கு நோய் தீர்ந்த பிறகு உன்னை மன்னித்து விட்டாள் அல்லவா?

கேயின் : அதன் பிறகு அவள் என்னை முன்னைவிட அதிகமாக நேசிக்கலானாள். பெண்களின் இயற்கை அது.

ஈவ் : (இரக்கமாக) அன்பு. அதை நீ அன்பென்கிறாய். பெண்ணின் தன்மை அதென்கிறாய் நீ! குழந்தாய், இது ஆணல்ல, பெண்ணல்ல, அன்பல்ல, வாழ்க்கையல்ல. உன் எலும்புகளில் வலிமை இல்லை, சதையில் ரத்தம் இல்லை.

கேயின் : ஆ! (ஈட்டியை எடுத்து அதைச் சுழற்றுகிறான்)

ஈவ் : உன்னுடைய வலிமையைச் சோதிக்க கழியைச் சுற்ற வேண்டியிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தாலல்லாமல் வாழ்க்கை இரகசியத்தை அறிந்து கொண்டேன் என்று நீ கூறமுடியாது. லுவா முகத்தை அழகு படுத்திக் கொண்டும் நல்லுடையை உடுத்திக் கொண்டுமில்லா விட்டால் நீ அவளை நேசிக்க மாட்டாய். நீ பொய்யைத் தவிர்த்து பிறவற்றை நம்ப மாட்டாய். உன்னைச் சுற்றியுள்ள அற்புதங்களை நீ கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாய். ஆனால் பத்து மைலுக்கப்பால் நடக்கும் சண்டையைப் பார்க்கச் செல்வாய்.

ஆதாம் : சொன்னது போதும் அவனைத் தனியே விட்டு விடு.

ஈவ் : (ஆதாமிடம்) இந்த விதமான வாழ்க்கை நல்லதென்று நீ நினைக்கிறாய் போலும். நீ மயங்குகிறாய். அவன் பெண்ணுக்குச் செய்வதைப் போல் நீ எனக்குச் செய்வாயா? நீயும் புலிகளையும் கரடிகளையும் கொன்று அவற்றின் தோலைக் குவித்து எனக்குப் படுக்கை யளிப்பாயா? நான் என் முகத்தை அழகு படுத்திக் கொண்டு நீ கொண்டு வந்து கொடுக்கும் புறா, ஆட்டிறைச்சி பால் முதலியவை உண்டு கிடக்கட்டுமா?

ஆதாம் : நீ நான் சொல்வதை கேட்கமாட்டாய். நீ இருக்கிறபடி நீ இரு; நான் இருக்கிறபடி நான் இருக்கிறேன்.

கேயின் : நீங்கள் இருவரும் வாழ்க்கையைப் பற்றி அறியாத காட்டு மிராண்டிகள். நீங்கள் வளர்க்கும் எருதுகளுக்கும் நாய்களுக்கும் கழுதைகளுக்கும் நீங்கள் அடிமைகள்; வேலைக்காரர்கள். நான் உங்களுக்கு ஒன்று கூறுகிறேன். மனிதர்களையே நமக்குச் சேவை செய்யத் தயார் செய்யக் கூடாதா? குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களுக்கு ஒன்றையும் தெரிவிக்காமல் வளர்த்தால் அவர்கள் நாம் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று எண்ணி நமக்காகத் தங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்வார்கள். அல்லவா?

ஆதாம் : (ஆமோதித்தவனாய்) அது நல்ல எண்ணம். ஆம்.

ஈவ் : (வெறுப்போடு) பெரிய எண்ணம்.

ஆதாம் : பாம்பு கூறியதைப் போல், 'ஏன் முடியாது?'.

ஈவ் : ஏனென்றால் அத்தகைய கொடிய பேய்களை நான் வீட்டில் வைத்துக் கொள்ள மாட்-

டேன். அவைகள் இயற்கைக்கு விரோதமான அங்கங்கள் உடையன. நான் கெயின் ஒரு மனிதனல்ல என்றும் லுவா ஒரு பெண் பிள்ளை அல்ல என்றும் கூறினேன். அவர்கள் அரக்கர்கள். நீ இன்னும் பல அரக்கர்களை உண்டாக்க வேண்டும் என்கிறாய். ஏனென்றால் நீ சோம்பேறியாக வேலையில்லாமல் திரியலாம் என்று எண்ணுகிறாய். அவர்களுக்கு வேலை செய்வது கடுமையாக இருக்கும். நல்ல கனவு, உண்மையில்! (கெயினிடம்) உன் தந்தை ஒரு முட்டாள் நீ ஒரு முழு முட்டாள்; உன் மனைவி எல்லாரிலும் பெரிய முட்டாள்.

ஆதாம் : நான் ஒரு முட்டாள்; உன்னை விடவா முட்டாள்?

ஈவ்: தோட்டத்திலுள்ள குரல் கொலை செய்யக் கூடாது என்று கூறுவதால் கொலையே இருக்காது என்று நீ கூறினாய். கெயினுக்கு மாத்திரம் அக்குரல், ஏன் அதைச் சொல்லவில்லை?

கெயின் : அது கூறிற்று. நான் என் சகோதரனின் காவலன் என்று நினைத்தது குரல். நான் என் சுபாவத்தை விடாதவன். ஏபிலும் தன் சுபாவத்தோடு தன்னைக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். அவன் என்னைக் கொன்றிருக்கலாம். நான் அவனைக் கொன்றால் அதற்கு ஒரு தடையும் இல்லை. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. நாங்களிருவரும் சண்டையிட்டோம். நான் ஜெயித்தேன். நான் தான் முதல் வெற்றி வீரன்.

ஆதாம் : நீ இதை யெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது இந்தக் குரல் உனக்கு என்ன கூறிற்று?

கெயின் ; சரியாகத் தான் சொன்னது. நான் ஏபிலைக் கொன்றதும் என்னை ஒருவரும் கொல்லக் கூடாது என்று ஏற்பட்டது என்று கூறிற்று. ஆனால் அச்சத்தோடும் பயத்தோடுமிருப்பவர்கள் முயலைப்போல் கோழைகளாய் இறந்தார்கள்; கொல்லப்பட்டார்கள். கெயின் போன்றவர்கள் தான் ஊரை ஆளப்பிறந்தவர்கள். கெயின் வீழ்ந்தால் வஞ்சம் தீர்த்துக் கொள்ளப்படும். இது அந்தக் குரல் கூறிற்று. ஆகையால் ஜாக்கிறதை. எனக்கு எதிரே கலகம் செய்தால்................

ஆதாம் : நீ பெருமை யடித்துக் கொள்வதை நிறுத்தி உன் சகோதரனைக் கொன்றதற்குப் பதில் உன்னை ஒருவரும் கொல்ல வரவில்லையானால் உன்னை நீயே கொன்று கொள்ள வேண்டுமென்று குரல் கூறிற்றல்லவா?

கெயின் : இல்லை.

ஆதாம் : அப்படியானால் ஒழுங்கு என்பது தெய்வ நீதியில் இல்லையா? நீ பொய் பேசுகிறாய்.

கெயின் : நான் பொய் பேசவில்லை. கடவுள் தண்டனை என்பது ஒன்று உண்டு. நான் என்னைக் கெல்லவரும்படி அனைவருக்கும் சவால் விடுக்கலாம். ஏபிலைக் கொன்றதற்கு அது தான் கழுவாய். என்னைக்கொல்ல யாராவது முன் வரட்டும். தைரியம் என்பதும் வீரம் என்பதும் அதுதான்.

ஆதாம் ; (சம்மட்டியை எடுத்துத் தோண்டப் போகிறான்) சரி நீ ஆயிரம் ஆண்டுகள் வாழ மாட்டாய். நான் ஆயிரம் ஆண்டுகள் இருக்க வேண்டும். உன்

[illegible] மனிதனும் [illegible] இல்லையானல் நீ உன் [illegible] கொடுமைகளால் இறப் [illegible] உன் சதை வளராது. [illegible] மூச்சு விடுவதற்கு பதிலாக இரும்பலால் அவதிப் படுவாய்; [illegible]ம்புவாய்; உன்னுடைய மயிர் கள் கொட்டிவிடும். உன் பற்கள் கறுத்துக் கொட்டிவிடும். நீ இறக்க வேண்டிய காலத்திற்கு முன்பே இறந்து விடுவாய். நான் தோண்டிக் கொண்டே உயிர் வாழ்வேன்.

கேயின்: பழைய மனிதா, நீ ஆயி ரம் ஆண்டுகள் வாழ்ந்தென்ன பயன். நீ தோண்டுவதில் ஏதா வது புதுமை கண்டாயா? நான் உன் அளவு நாள் ஜீவித்திருக்க வில்லை. தோண்டுவதைப் பற்றிய சூட்சுமங்கள் எனக்குத் தெரி யும். அதை விடச் சிறந்த தொழிலை நான் பின்பற்றினேன். எனக்குப் போர் செய்யவும் வேட்டை யாடவும் தெரியும். அதாவது கொலைத் தொழில் எனக்குத் தெரியும். நீ ஆயிரம் ஆண்டுகள் ஜீவித் திருப்பாய் என்பது என்ன நிச்சயம். நான் இப்பொழுது உங்கள் இரு வரையும் ஆடு மாட்டைக் கொல் வது போல் கொன்று விடலாம். நான் கொல்ல மாட் டேன். வேறு யாராவது உங் களைக் கொன்று விடலாம் ஏன் தைரியமாக வாழக்கூடாது? இறந்து பிறருக்கு இடம் அளிக் கக் கூடாது? வேட்டையாடு வதில் சளைத்து விட்டால் வேறு எத்தனையோ தொழில்கள் எனக்குத் தெரியும். குரல் சில சமயங்களில் என்னைத் தூண்டு வதைப் போல் ஆயிரம் ஆண்டு கள் உயிரோடிருப் பதைவிட நான் என்னுயிரை நானே மாய்த் துக் கொள்வேன்.

ஆதாம்: பொய்யா, சற்று முன்பு என்ன கூறினாய்? ஏபில் உயிருக்குப் பதில் என் உயிர் பலி கொடுக்கப்பட வேண்டுமென்று அது கூறிற்றென்றாயே.

கேயின்: குரல் உன்னிடம் பேசுவதைப் போல் என்னிடம் பேசாது. நான் ஒரு ஆண் மகன். நீயோ ஒரு வயதுமுதிர்ந்த கைக் குழந்தை. குழந்தைகளிடம் பேசுவது போல் பெரியவர் களிடம் யாரும் பேசமாட்டார் கள். மனிதன் பயப்படுவதில்லை. அவன் பதில் பேசுகிறான். குரல் அவனுக்கு மரியாதை காட்டும் படி அவன் நடந்து கொள்கிறான். கடைசியில் தான் விரும்பியதைக் கூறும்படி அவன் குரலுக்குக் கட்டளையிடுகிறான்.

ஆதாம்: உன்னால் பொய் பேச அஞ்சுவதில்லை.

ஈவ்: உன் நாவை அடக்கிப் பேசு. என் மகனைச் சபிக்காதே. விதி செய்த கொடுமை இது. ஆணும் பெண்ணும் தோற்றத் தில் சமபங்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவள் வகுக்க வில்லை. இறந்த ஏபிலுக்குப் பதில் ஓர் ஏபிலை உற்பத்தி செய் யும் சக்தி உனக்கு இருந்திருக்கு மானால் நீ இவ்வாறு அவனைக் கொன்றிருக்க மாட்டாய், கெயின். அவனுக்காக உன் உயி ரையே கொடுத்திருப்பாய். மனி தரை அழிக்கும் ஆணுக்கும், மனிதரை உண்டாக்கும் பெண் ணுக்கும் இதனால் தான் சண்டை ஏற்படுகிறது. சுயநலம்கொண்ட மூடா! ஒரு உயிரை உண்டாக்கு வது கடினம். ஆனால் அதை முடிப்பது எளிது. பூமியைத்

சிறுவர் பகுதி:

# விதியின் விளையாட்டு

ரா. சீனிவாசன்

நான் ஒரு ஸ்டேஷன் மாஸ்டர்; ஸ்டேஷன் மாஸ்டர் என்றால் ஒரே ஸ்டேஷனில் எப்பொழுதும் வேலை செய்பவன் அல்ல. அடிக்கடி எங்களை மாற்றிக்கொண்டிருப்பார்கள். ஒருசமயம் அரக்கோணத்துக்கு அடுத்த தலங்கை என்னும் ஸ்டேஷனில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தேன். நான் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தாலும் நானே டிக்கட் விற்கவேண்டும்; நானே டிக்கட் வாங்க வேண்டும்; வண்டிக்குக் கொடி காட்ட வேண்டும்; 'போர்டர்' இல்லாவிட்டால் நானே மணி அடிக்கவேண்டும். சகலமும் நானே செய்யவேண்டும்! இது என் அன்றாட வாழ்வு.

வழக்கம்போல் ஒருநாள் இரவு எட்டு மணிக்குமேல் டிக்கட்டுகளை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த ஊரில் மணி எட்டு ஆகிவிட்டால் யாருமே நடமாட மாட்டார்கள். நானும் விளக்குமே துணையாகக் காலம் கழிக்கவேண்டும். எங்கும் அமைதி நிலவிற்று; நான்மட்டும் பணத்தை எண்ணிக்கொண்டு கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது சன்னலண்டை யாரோ நிற்கிறதாகக் காணப்பட்டது. இனிமேல் தான் எந்தப் பக்கம் போகவும் வண்டி கிடையாதே. ஏன் காத்துக்கொண்டிருக்கவேண்டும் என எண்ணினேன். "யார் அது?" என்று கேட்டேன். பதில் இல்லை, மறுபடியும் கேட்டேன். பதில் வரவில்லை. அந்த ஸ்டேஷனில் திருடர் பயம். அதனால் அந்த உருவம் ஒரு வேளை திருடனோ என்று எண்ணத் தொடங்கினேன். 'போர்டர்' ஒரு தூங்கு மூஞ்சி. அவன் எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்தான். எனக்குப் பயம் எடுக்க ஆரம்பித்தது; பணம் போனாலும் கவலை இல்லை. ஏனெனில் அங்கே இருந்த பணம் மொத்தமே முப்பது ரூபாய்க்கு மேல் காணாது. என்னைக் கத்தியாலே குத்திவிட்டால் என்ன பண்ணுவது என்பதுதான் எனக்கு அச்சம். ஒரு பயங்கர எண்ணம் எனக்கு அச்சத்தைத் தந்தது.

என்றாலும் சிறிது தைரியத்தோடு, "யார் ஐயா! ஏன் நிற்கிறாய்? மேற்கே போக வண்டி யொன்று மில்லை" என்றேன். அந்த உருவம் நகருவதாக இல்லை. மெதுவாக விளக்கு எடுத்துப் பார்த்தேன்.

நான் கண்டது வேறு. ஓர் அழகிய உருவம்; முக்காடிட்ட நங்கையின் அழகிய முகம்; மூக்குத் திருகு மினு மினுத்தது; அவள் கரிய விழிகள் என்னையே நோக்கின. எனக்குத் தைரியம் பிறந்தது. அப்படியே கணக்குப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வெளியே வந்தேன்.

---

தோண்டியபோது உலகம் வாழ நீ உதவினாய் என்னைப் போல். விலித் கஷ்டப்பட்டு உன்னை உண்டாக்கிறது அதற்குத்தான். களவு புரியவும் கொலை செய்யவும் அல்ல.

(அடுத்த இதழில் முடியும்)

...ணிகள் விடுதியில் வேறு யாரும் இல்லை. நாய் ஒன்று ...வயிற்றோடு படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. வேறு ...துணையின்றி தன்னந் தனியளாக நின்றிருந்தாள்.

"நீ யார்? ஏனம்மா என்னவேண்டும்? எந்த ஊருக்குப் போக ...டும்?" என்று கேட்டேன்.

"ஐயா! அது தான் எனக்குத் தெரியவில்லை. நான் எந்தவூருக்குப் போகவேண்டும் என்று தான் எனக்குத் தெரியவில்லை" என்றாள்.

போர்ட்டர் ஒரு மூலையில் தூங்கிக்கொண்டிருந்தான். ஊர் எங்கும் ஓரே அமைதி குடிகொண்டிருந்தது. எங்கும் கார் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. பிளாட்பாரத்தில் விளக்கு ஒன்று 'மினுக்' 'மினுக்' என்று எரிந்துகொண்டிருந்தது. காற்றுமட்டும் சில்லென்று வீசிக் கொண்டிருந்தது.

பிரயாணிகள் விடுதியை விட்டு அவள் பிளாட் பாரத்துக்கு வந்தாள். இருவரும் அங்கே போட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தோம். அந்த விளக்கின் ஒளி அவள் முகத்தில் மங்கலாக வீசிக்கொண்டிருந்தது. துன்பத்தின் குறிகள் அவள் முகத்தில் காணப்பட்டன. அவளைப்பற்றி, அறியவேண்டும் என்ற ஆவல் என்னைத் தூண்டிற்று.

"ஏன் நீங்கள் போக வேண்டிய இடம் உங்களுக்கே தெரியவில்லையா? வழி தவறி வந்து விட்டீர்களா?" என்றேன்.

"ஆம் பாதையில் மட்டும் வழி தவறவில்லை. வாழ்க்கையிலும் வழி தவறிவிட்டேன். உங்களால் இரண்டுக்கும் வழிகாட்ட முடியுமா?" என்றாள்.

அவள் கூறியது புதிராக இருந்தது. "நீங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே விவரமாகச் சொல்லுங்கள்" என்றேன்.

"விவரமாகச் சொல்லுகிறேன். கேட்டபிறகு எனக்கு நீங்கள் வழிகாட்டவேண்டும்." என்று கூறினாள்.

"உங்கள் சொந்த ஊர் எதுவோ அங்குத் தானே போகவேண்டும்" என்றேன்.

"அங்குத்தான் போக முடியாது. அது ஒரு கதை" என்றாள்.

"ஏன்?"

"ஏன? காரணம் சொல்லுகிறேன். ஆனால் கேட்டால் நீங்கள் என்னை வெறுப்பீர்கள். அதைக் கேட்காமல் இருப்பதே நலம்."

"பரவாயில்லை. நான் தவறாக நினைக்க மாட்டேன். விதியின் விளையாட்டை யார் அறிய முடியும்."

"கலங்கிய என் மனத்துக்கு வழிகாட்டுவீர்கள் என்று நம்புகிறேன். வழிகாட்டா விட்டாலும் என் மனத்திலுள்ள பாரத்தைச் சொல்லிக் குறைத்துக்கொள்ளுகிறேன்."

"நான் நல்ல தமிழ்க் குடும்பத்திலே பிறந்தேன். உயர்ந்த வேளாளர் மரபிலே பிறந்தேன். என் பெற்றோர்கள் என்னை மிக அன்பாக வளர்த்தார்கள். நான் வயதுக்கு வாராமுன் நான் ஆடிப்பாடி மகிழ்ந்தேன். வாழ்க்கையைப் பற்றி அறியாத அந்த இளமைப் பருவம் திரும்பி

வா என்றால் வருமா? வராது. வயதுக்கு வந்தேன்.

" திருமணமும் செய்வித்தார்கள். வாழ்வினையை நான் என்னவென்று கூறுவது! அவரிடத்தில் நான் மிக அன்பாக இருந்தேன். அவரும் என்னிடத்தில் மிக அன்பாக இருந்தார். வாழ்ந்தது சில மாதங்களே. ஆனால் அவருக்கு ஏற்கனவே இருந்த இருமல் நோய் அவரை வாட்டத் தொடங்கிற்று. இந்த மீளா நோய்க்கு அவர் ஆளானது விதியின் விளையாட்டே.

" விதி என்னைச் சதி செய்தது. நான் விதவையானேன். வாழ்வின் மணத்தை இழந்தேன். என் கூந்தலிலும் மலரை இழந்தேன். நெற்றியில் பொட்டை மறந்தேன். என் வாழ்க்கை! என் இளமை! சூனியமாகக் கழிந்தது.

" வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தேன். விதவையான பிறகு நல்ல இடங்களுக்கும் நான் செல்லக்கூடாது. என் கணவன் இறந்ததை எண்ணிப் பல சமயங்களில் கண்ணீர் விட்டுக்கொண்டே இருப்பேன். நோயாளியாகிய இவர் என்னை ஏன் மணம் செய்து கொள்ள வேண்டும்? ஏன் என் வாழ்வைப் பாழ் படுத்த வேண்டும் என்று அவரை நோவேன். துன்பத்திலும் அழுகையிலும் காலம் கடத்தினேன்.

ஆனால் பக்கத்து வீட்டு இராமச்சந்திரனிடம் என் மனம் செல்லத் தொடங்கிற்று. இருவரிடையே காதல் வளர்ந்தது. அவனும் நானும் இளமையிலே இருந்து நல்ல தோழர்களாக விளையாடி இருக்கிறோம். நான் சிறுமியாக இருக்கும் பொழுது நாங்கள் இருவரும் "அம்மா அப்பா" விளையாட்டு விளையாடுவோம். நான் 'அம்மா'வாக இருந்து மணலால் சோறு சமைப்பேன். அவன் வேலைக்குப் போய் வருவது போல் கோட் முதலிய போட்டுக் கொண்டு 'தாட் பூட்' என்று உள்ளே வருவான். நான் அவனுக்குச் சோறு இடுவேன். 'அடியே' உன் சமையல் நன்றாக இருக்கிறது என்று சொல்லுவான். நானும் சிரிப்பேன்; வெற்றிலைப்பாக்குக் கொடுப்பேன். அவனும் போட்டுக் கொள்வான். வயது வந்த பிறகு பள்ளிக்கூடத்தில் நாடகம் நடத்தினார்கள். நான் கண்ணகி வேஷம் போட்டேன். அவன் கோவலனாக வேஷம் இட்டான். இருவரிடையேயும் நட்பு வளர்ந்தது. வயதுக்கு வந்த பிறகுதான் நான்

நஞ்சன்கூடு பல்பொடி
I.D.L.61, மெடிகேடட்
I.D.L.21 ச்யாவனப்ராச சுவாசகோச டானிக்
I.D.L.32 ஆல்மன்டைன் பலவிருத்தி, வீர்யவிருத்தி
I.D.L.71 ஹெமர்டோன் ரக்தகோச டானிக்
வியாதி விபரம் எழுதித் தபால்மூலம் சிகிச்சை பெறலாம்
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

வேறு அவன் வேறு ஆனேம். அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒரு வகையான காணம் என்னை வந்தடையும்.

ஆனால் விதி வேறு வகையாக நடத்துவித்தது. வாழ்க்கை வேறு விதமாக உருக்கொண்டது. மற்றொருவனுக்கு வாழ்க்கைப் பட்டேன். அவ் வாழ்க்கை பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் முடிந்தது.

வறண்ட வாழ்க்கையில் அவன் இளமை நினைவுகள் தண்ணிய சோலைகளாக விளங்கின. அதிகம் பேசிப் பயன் என்ன? நானும் அவனும் மனங் கலந்தவர்களானேம்.

" ஆனால் என் பெற்றோர்கள் எங்கள் நடத்தையை உணர்ந்து கொண்டார்கள். என் தந்தை அவனை வெட்டி விடுவதாகப் புறப்பட்டார். கத்தியை எடுத்துக் கொண்டு மறுபடியும் வந்து என்னையும் தீர்த்து விடுவதாகச் சொல்லிச் சென்றார்.

" இந் நேரத்திற்கு என்ன கதியாயிற்றோ தெரியவில்லை. யார் மடிந்தார்களோ தெரியவில்லை. என் உடல் அச்சத்தால் நடுங்க ஆரம்பித்தது. சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்து விட்டேன். நான் அகப்பட்டால் என் தந்தை என்னைக் கொன்று விடுவது நிச்சயம். உயர்ந்த வேளாண் குடும்பத்துக்குப் பங்கம் வந்து விட்டதாக எண்ணி விட்டார் அவர்."

" நான் புறப்பட்டு நான்கு நாட்கள் ஆகின்றன. இருந்த பணமும் ஆகிவிட்டது. நான் எங்கே தங்கினும் நாலு ஆடவர்கள் பருந்து வட்டமிடுவது போல வட்டமிட்டுக் கொள்ளுகிறார்கள், நான் அவர்களிடம் தப்பிப் பிழைப்பது அருமையாக இருக்கிறது."

" கெட்டதும் கெட்டேன். மறுபடியும் என் ஊர் திரும்பப் போவது இல்லை. போனால் என் உயிர் நிற்காது. கட்டாயம் என் தந்தையின் கோபத்துக்கு ஆளாக வேண்டியதுதான்.

" ஆதலால் நான் இப்பொழுது எங்கே போவது" என்று கேட்டாள் அவள்.

எனக்குப் பதில் தெரியவில்லை. சும்மா இருந்தேன். மறுபடியும் அவள் "நான் ஒன்று சொல்லுகிறேன் கேட்கிறீர்களா? நான் உங்கள் வீட்டில் இருந்து விடுகிறேன். என்னை உன் தங்கையாகப் பாவித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு வேண்டிய தொண்டுகள் செய்கிறேன். எனக்குப் புகலிடம் கொடுக்க வேண்டும்" என்றாள்.

என் மனைவி பொல்லாதவள். சந்தேகம் நிறையக் கொண்டவள். எங்கள் வீட்டில் ஏற்கனவே அமைதி என்றால் என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. அவளுக்குச் சிறிது நான் அடங்கினவன் என்று தான் கூறமுடியும். எனக்கு அவளை அழைத்துப் போகத் தைரியம் இல்லை. மேலும் ஊரார் தவறாக நினைப்பார்களே. என்ன செய்வது? மேலும் நான் கடைசி வரை கண்ணியமாக நடந்து கொள்ளுவேனே என்பதும் எனக்கே சந்தேகம். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அவள் " மறுபடியும் நான் எங்கே போக வேண்டும்" என்று கேட்டாள்.

" சென்னைக்குப் போ; அங்கே சேவசாதனம் போன்ற இடங்களில் சேர்ந்து விடு. உனக்குப் புகலிடம் கிடைக்கும் என்று கூறி ஒரு டிக்கட் கொடுத்து அவளிடம் ரூ 10—கொடுத்தேன். மறுநாள் காலை வண்டியில் ஏற்றி அனுப்பினேன்.

இந் நிகழ்ச்சி நடந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன. நான் இப்பொழுது புதுப்பாக்கம் ஸ்டேஷனில் ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கிறேன். அதே உருவத்தை ஆறு ஆண்டுகள் கழித்து இப்பொழுது கண்டேன். முதலாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். அவளும் என்னைக் கண்டாள். 'அண்ணா! என்றாள். அவளோடு ஓர் ஆடவன் இருந்தான்; குழந்தை ஒன்று தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. வண்டியும் நகர்ந்து விட்டது.

" என்ன சார்! அவர்களை உங்களுக்குத் தெரியுமா! கமலினி படத்தார் எடுக்கும் கண்ணகி படத்தில் அவள் கண்ணகியாகவும் அவன் கோவலனாகவும் நடிக்கிறார்களே அவர்கள் உங்களுக்கு எம்படித் தெரியும் சார்" என்று கேட்டார் பக்கத்தில் என்னோடு நின்றிருந்த சினிமா ரசிகரான என் நண்பர். " அப்படியா! என்றேன்."

" மறு நாள் ஒரு கடிதம் எனக்கு வந்தது. பிரித்துப் பார்த்தேன்

'முருகன் நிலையம்'

23, இராமகிருஷ்ண தெருவு, தியாகராயநகர், சென்னை.

அன்புள்ள அண்ணா, 25-11-48

நலம். நலம் அறிய ஆவல். அன்று பார்த்தீரே அவர்தான் என் இராமச்சந்திரன். சிறு வயதில் என்னோடு பள்ளியில் கோவலனாக நடித்தவர். இப்பொழுது சினிமாவிலும் கோவலனாக நடிக்கின்றார்.

விதி எனக்கு நன்மையே தந்தது. என் தந்தையின் கோபத்தை அறிந்த அவரும் ஊரை விட்டு வெளியே வந்து விட்டார்.

அவரும் சென்னையில் வந்து சினிமாக்களுக்கும் நாடகங்களுக்கும் கதைகள் எழுதித் தன் காலத்தைக் கடத்தினார். பெயரும் புகழும் பெற்றார். நான் சேர்ந்த விதவை விடுதியார் நடத்திய கண்ணகி நாடகத்தைக் காண அவரும் வருந்திருந்தார். நான் கண்ணகியாக நடித்தேன். கண்ணகியைக் கோவலன் கண்டு கொண்டார். இருவரும் சந்தித்தோம். குழந்தை முருகனிடம் மாமா வரப் போகிறார் என்று கூறியிருக்கிறேன். " எங்கே மாமா? எப்பொழுது வருவார் " என்று கேட்கிறான். கட்டாயம் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து போக வேண்டும். அவரும் உங்கள் வரவை எதிர்பாக்கிறார். இப்படிக்கு,

உங்கள் அன்புள்ள தங்கை, மீனாட்சி.

இந்தக் கடிதத்தைப் பார்த்தேன். எல்லாம் விதியின் விளையாட்டு என்று என் வாய் சொல்லத் தொடங்கியது.

Printed by V. Rajammal at Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah. Published by G. Ramasami, 34, Vaithiyanatha Mudali Street, Chetput, Madras 10
Editor : A. M. Paramasivanandam, B.A., M.Litt. M.R.A.S.